பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 24 வெள்ளிக்கிழமை 09.08.2024 கதிர் 275

## 24 மணி நேரத்துக்குள் தேர்தல் முறையீடுகள் 20

2024 ஜனாதிபதி தேர்தலுக்கானதிகதிதேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளநிலையில்,கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் (நேற்று பி.ப 04.30 வரை) தேர்தல் சட்டவிதிகளைமீறிசெயற்பட்டமை தொடர்பாக 20 முறைப்பாடுகள் கிடைக்கப் ☞ 8

## லால் காந்தவை கைது செய்ய சட்டத்தரணிகள் குழு முறையீடு

தேசிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் கே. டி. லா-ல்காந்தவை கைது செய்து விசாரணை நடத்துமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் குழு நேற்றுகுற்றப்புலனாய்வு திணைக்களத்தில்முறைப்பாடு செய்துள்ளது.

காலிமுக ☞ 2

### வெலிக்கடைச் சிறைப் படுகொலை வழக்கு

## எமில் ரஞ்சனின் தண்டனை உயர் நீதிமன்றால் நிறுத்தம்

முன்னாள்சிறைச்சாலை ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவாவிற்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்து செய்து உயர் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

2012ஆம் ஆண்டு வெலிக்கடையில் 8 கைதிகள் கொல்லப்பட்ட வழக்கில், கொழும்பு மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் எமில் ரஞ்சன் லமாஹேவாவைவிடுதலை செய்ய உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச் சாலைக்குள் 8 கைதிகளை சுட்டுக் கொன்றமை தொடர்பில்குற்றம்சாட்டப்பட்ட பொலிஸ்போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவின்முன்னாள் பொலிஸ் பரிசோதர் நியோமால்ரங்கஜீவமற்றும் முன்னாள்சிறைச்சாலைகள் ஆணையாளரான எமில் ரஞ்சன் லமாஹேவா, சிறைச்சாலைகளின் முன்னாள் உளவுப்பிரிவு அதிகாரியான இந்திக சம்பத் ஆகியோருக்கு எதிராக சட்டமாஅதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து வழக்கு தொடரப்பட்டிருந்தது.

2012 நவம்பர் 9 சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட கலகத்தின்போது27கைதிகள் கொல்லப்பட்டிருந்தனர். ஆயினும் 8 கைதிகள் கொல்லப்பட்டமைதொடர்பிலேயே வழக்கைத் தாக்கல் செய்வதற்கு போதுமான சாட்சிகள்கிடைத்ததன் ☞ 8



## இது ரகசியம் அல்ல!

ஒரு வழியாகப் தமிழ் பொது வேட்பாளரைக் கண்டுபிடித்து அறிவித்துவிட்டார்கள். தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அரியநேந்திரன்தான் அந்த வேட்பாளர்.

வேட்பாளரை அறிவிக்கும் செய்தியாளர்கள்சந்திப்புநேற்றுதந்தை செல்வாகலையரங்கில்இடம்பெற்றது. அந்தக் கூ-ட்டத்தில் ரெலோ தலைவரோ கட்சியின் பிரதிநிதிகளோ கலந்துகொள்ளவில்லை. கட்சியின் யாழ். மாவட்ட உறுப்பினரும்வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான விந்தன் கனகரட்ணம் கலந்துகொண்டார். ஆனால் அவர் கட்சயின் சார்பில் அனுப்பப்பட்ட பிரதிநிதி அல்லர் என்று தெரிவிக்கப்பட்டது. புளொட் தலைவர் சித்தார்த்தனும் நிகழ்வில் இல்லை. தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் விக்னேஸ்வரனும் இல்லை.

கொழும்பில் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் இடம்பெற்று வருவதால் இவர்களால் பங்கெடுக்கமுடியவில்லை என்று காரணம் சொல்லப்பட்டது. ஆனால் அவர்களின் கட்சிகளின் சார்பில் எந்தப் பிரநிதியும்கூட கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. ☞ 2

# தமிழ் பொது வேட்பாளர் சுயேச்சையாகப் போட்டி

## அரியநேத்திரன் தெரிவு

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் சார்பில்தமிழ்ப்பொதுவேட்பாளராக முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் போட்டியிடவுள்ளார் என நேற்று அறிவிக்கப்பட்டது. அவர் சுயேச்சையாகப்போட்டியில்நிற்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் நேற்றுப் பகல் செய்தியாளர்கள் மத்தியில் பொதுக்கட்டமைப்பின்தலைவர்கள் இது தொடர்பான அறிவிப்பை ☞ 2

## நீதி அமைச்சும் இனி ஜனாதிபதியின் கீழ்

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும்அரசியலமைப்புசீர்திருத்தங்கள் ஆகிய அமைச்சுப் பொறுப்புகளை நேரடியாக ஜனாதிபதியின் கீழ் மாற்றும் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கலாநிதி விஜயதாச ராஜபக்ச தனது அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து இந்த மறுசீரமைப்புமேற்கொள்ளப்பட்டுள்ளது.

விஜயதாச ராஜபக்ச எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில்போட்டியிடுவதற்கு தயாராகும் வகையில் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான அமைச்சுப் பிரிவை நேரடியாக ஜனாதிபதியின் கீழ் மாற்றுவதற்கான வர்த்தமானியில் ஜனாதிபதியின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டது.

## இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதை உரத்துச் சொல்லத்தான் தமிழ் பொது வேட்பாளர்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

இலங்கையில் இனப்பிரச்சினைதொடர்ந்தும்இருக்கன்றது; அது தீர்க்கப்படவில்லை என்பதை உலகத்திற்கு உரத்துச் சொல்வதற்காகத்தான்தமிழ்பொது வேட்பாளர் நிறுத்தப்படுகின்றார் என்று ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவரும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளருமான சுரேஸ் பிறேமசந்திரன் தெரிவித்தார்.

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளரை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு ☞ 8

## மேலும் 6 லட்சம் டொலர் காஸாவிற்கு நிதி உதவி

காஸாவில் இடம் பெறும்போர்காரணமாக இடம்பெயர்ந்த சிறுவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் எண்ணக் கருவின்படி உருவாக்கப்பட்ட 'காஸா சிறுவர் நிதியத்திற்கு' மேலும் ஐந்து இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் (590,000) அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன.

இந்தத் தொகையை பலஸ்தீன அரசிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று ஜனாதிபதிஅலுவலகத்தில் இடம்பெற்றது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ ஆவணங்களை ☞ 2

## பன்றி, நாய் சின்னங்கள் பட்டியலிலிருந்து நீக்கம்

### தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை

ஜனாதிபதித்தேர்தலில் சுயேச்சையான வேட்பாளர்களுக்குஒதுக்கப்படும் சின்னங்களின் பட்டியலில், தர்மசங்கடத்தை ஏற்படுத்தக்கூடியமற்றும் மத உணர்வைப் புண்படுத்தும் சின்னங்களை தேர்தல்கள் ஆணைக்குழு நீக்கியுள்ளது.

அதன்படி, பன்றி மற்றும் நாய் ஆகிய இரண்டு சின்னங்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதேவேளை, ☞ 8

## கெஹலியவின் மறியல் ஓக. 22 வரையும் நீடிப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட நால்வரும் ஒகஸ்ட் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை நேற்று மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்த, சுகாதார அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் சமன் ☞ 8

### மன்னார் இளம் தாய் உயிரிழப்பு சம்பவத்தில்

## தவறு செய்தோர் இருந்தால் ஒழுக்காற்று நடவடிக்கையாம்

மன்னார் வைத்திய சாலையில்அனுமதிக்கப்பட்டிருந்த இளம் தாய் சிந்துஜாவின்உயிரிழப்புத் தொடர்பில் தவறுகள் இடம்பெற்றிருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைஎடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். ☞ 8

## அனைத்துத் தரப்பினரையும் இணைத்து பொருளாதாரத்தை பலப்படுத்துவதே திட்டம்

### ரணிலின் நம்பிக்கை அதுவே என்கிறார் ருவான்

அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து இந்நாட்டின் எதிர்காலத்தையும் பொருளாதாரத்தையும் பலப்படுத்துவதே அவரது நம்பிக்கை என்று ஐக்கிய தேசியக் கட்சியின்பிரதித்தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

'ஒன்றிணைந்து வெற்றிபெறுவோம்' என்றதொனிப்பொருளில் நேற்று கொழும்பில் செய்தியாளர்களைச் ☞ 2

## பவித்திராவும் ரணில் பக்கம்

வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவைதெரிவித்திருந்த நிலையில் பவித்திரா வன்னியாராச்சிஎந்தவித தீர்மானத்தையும் வெளியிட்டிருக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டு தேர்தலில் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளார்.

அவர்வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

என்னுடன் அரசியலில் ஈடுபட்டு வரும்அரசியல்வாதிகள், நிபுணர்கள் உள்ளிட்ட பலருடன் நீண்ட ஆலோசனைகளை நடத்திய பின்னர் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அதற்குக் காரணமாக உள்வீட்டு குத்துவெட்டுக்கள் குறித்து பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகின்றேன். அதற்கு முன்னர், தமிழ் அரசின் அரியநேந்திரனை பொது வேட்பாளராக அறிவித்ததில் அந்தக் கட்சியின் மற்றொரு மத்திய குழு உறுப்பினரான சட்டத்தரணி தவராசா தரப்பினர் கடும் கோபம் கொண்டுள்ளனர்.

தவராசாவை நம்ப வைத்துக் கழுத்தறுத்துவிட்டார்கள் என்று அவரது தீவிர ஆதரவாளர் ஒருவர் புலம்பிநேற்றுஒருவெளியீட்டையும் வாட்ஸ் அப் குழுக்களில் பகிர்ந்து கொண்டிருந்தார். அதில், பொது வேட்பாளருக்கு ஆகச் சிறந்த தெரிவுதவராசாதான், அவரால்தான் மும்மொழிகளிலும் பேசமுடியும் அதனால் சர்வதேசசமூகத்துடனும் கலந்துரையாட முடியும், அவரை நிறுத்தியிருந்தால்வடக்குகிழக்குதமிழர்கள் மட்டுமல்ல கொழும்புத் தமிழர்களும் 5 சதவீத சிங்களவர்களும்கூடவாக்களித்திருப்பார்கள், அப்படிப்பட்டவர்களைபிரதேசவாதம் பேசி ஒதுக்கிவிட்டார்கள் என்று குமுறுயிருக்கின்றார். தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் தலைவர்கள் தமக்குக் கட்டுப்பட்டு ஏவல் செய்யக்கூடிய ஒருவரைத் தலைவராகத்தெரிவுசெய்யவிரும்பிய காரணத்தாலேயே தவராசாவை வெட்டிவிட்டார்கள் என்றும் குற்றங்சாட்டியிருக்கின்றார்கள்.

பொது வேட்பாளர் அரியநேந்திரன்தான் என்று முடிவு செய்துவிட்டார்கள் என்பதை அறிந்ததுமே தவராசாவின் ஆதரவாளர்கள் செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் தமது கிளர்ச்சியைத் தொடங்கியிருந்தார்கள். அவர்கள் தமிழ் குடிமைச் சமூகத்தின் பிரதிநிதிகள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்களைச் சந்தித்துப் பேசியுள்ளனர். அது சரிவராத நிலையில், யாழ்ப்பாணத்தில்இருந்து இயங்கும்தொலைக்காட்சிஒன்றின் தலைவரும்இந்த பொது வேட்பாளர் திட்டத்தின்பின்னால்இருந்துஇயக்க வருவபருமான ஒருவரிடமும் சென்று பேசியிருக்கிறார்கள். தவராசாவைத்தான் பொது வேட்பாளராகப் போடவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால் எதுவும் வேலைக்காகாத நிலையில் அரியநேந்திரன் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

அறிவிக்கப்பட்ட கையோடு உரையாற்றய அரியநேந்திரன், ஒன்றில் நீ அல்லது நான் என்கிற இணக்கப்பாடுதனக்கும்சட்டத்தரணி தவராசாவுக்கும் இடையில் இருந்ததாகத் தெரிவித்தார். சட்டத்தரணி தவராசா அப்படிச் சொன்னார் இப்படிச் சொன்னார் என்று தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் பல விடயங்கள் சொல்லப்பட்டு அவற்றை அவர் மறுத்துரைத்தது எல்லாம் பழைய கதையாகிவிட்டன. எப்படியானாலும் இப்போது அரியநேந்திரன்தான் பொது வேட்பாளர்.

அரியநேந்திரன் ஒரு முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்என்பதால் அவரை ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாக நிறுத்த முடியும் என்பதே அவரது தெரிவுக்குப் பின்னால் உள்ள காரணம் என்று சொல்லப்படுகின்றது. கட்சிகளின் சின்னங்களை இந்தத் தேர்தலில் அறிமுகப்படுத்தி அதன் மூலம் அந்த ஒரு கட்சியை வளர்த்துவிட்டதாக அமைந்துவிடாமல்இருப்பதற்காகவே இப்படிச் சுயேச்சையாக ஒருவரை நிற்கவைக்கத்தக்க வகையில் முடிவு எடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து முதலாவது கூட்டம் நாளை கிளிநொச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெறுகின்றது. கிளிநொச்சிமாவட்டவிவசாய,வணிக சம்மேளனத்தின் பெயரில் இந்தக் கூட்டம்ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டாலும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் அனுசரணை ஆசீர்வாதத்துடன்தான் கூட்டம் நடத்தப்படுகின்றது என்றும் தகவல். இதற்கான அழைப்பிதழ்கள் அவரது நாடாளுமன்ற உறுப்பினருக்கான கடித உறைகளிலேயே அனுப்பப்பட்டிருக்கின்றன என்று அவை கிடைத்த பலர் தெரிவித்தனர். அப்படியென்றால் அவர் அழைக்கின்றார் என்றுதானே அர்த்தம் என்றும் அவர்கள் கேட்கின்றனர்.

அரியமோ தவராசா அண்ணையோ பொது வேட்பாளராகப் போனால் அவர்களுக்கு எதிராகக் கட்சியில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் பலரும் கேட்கும்படி ஒருபுறத்தில் பேசிக் கொண்டு, மறுபுறுத்தில் அந்த வேட்பாளருக்கு அனுசரணையும் ஆசீர்வாதமும் வழங்கப்படுகின்றது. பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் அரசியல்வாதிகளின் இந்தப் போக்கு எப்போதுதான் முடிவுக்கு வருமோ!

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## தமிழ் பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று அண்மையில் தமிழ் சிவில் சமூகத்துக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது சிவில் சமூகக் கட்டமைப்பினருடன் இணைந்து தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ் தேசிய பசுமை இயக்கம், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன ஆதரவளிக்கவுள்ளன.

தமிழ் பொது வேட்பாளராக நிறுத்தப்படுவதற்காக 75 பேரின் பெயர்கள்பரிசீலிக்கப்பட்டுஇறுதியில் கிழக்கைச் சேர்ந்த அரியநேந்திரன் தெரிவுசெய்யப்பட்டார்என்றுசுரேஸ் பிரேமச்சந்திரன் தெர்வித்தார்.

## அனைத்துத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்தார் அவர். பம்பலப்பிட்டி லொரிஸ் மாவத்தையில் அமைந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதி தேர்தல் ஊடக மையத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அங்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன மேலும் தெரிவித்ததாவது:

நாட்டைப் பற்றிச் சிந்தித்து இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து இந்நாட்டின் எதிர்காலத்தையும் பொருளாதாரத்தையும் பலப்படுத்துவதேஅவரதுநம்பிக்கை.

ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின்பிரதமராகஆறுமுறைபதவி வகித்தார். அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர் கட்சியைக் காக்க பாடுபடாமல் நாட்டைப் பற்றியே சிந்தித்தார். இந்நாட்டின் பொருளாதாரம் உடைந்திருந்த கால கட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியைப் பொறுப்பேற்றார்.

2001ஆம் ஆண்டு பிரதமராக ஆட்சியமைத்து முன்னோக்கிச் சென்றபோது ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவுடன் ஏற்பட்ட பிரச்சினையால் அவரால் தனது நம்பிக்கையை நிறைவேற்ற முடியவில்லை. அவரது ஆளும்தரப்பு வீழ்ந்தது. ஒவ்வொருசந்தர்ப்பத்திலும் எதிர்மறைப் பொருளாதாரம் நேர்மறைப் பொருளாதாரமாக மாற்றப்பட்டபோது மற்ற கட்சிகள் அவரதுபயணத்தைத்தோற்கடித்தன.

2005 ஜனாதிபதித் தேர்தலில் ரணில்விக்கிரமசிங்கவின்வெற்றிக்கு புலிகள்தடையாகநின்றார்கள். வடக்கு மக்களை பலவந்தமாக வாக்களிக்க வேண்டாம் எனத் தடுத்தார்கள். 2015ஆம் ஆண்டு நல்லாட்சியில் பொருளாதார வேலைத்திட்டம் வலுவாக இருந்த காலத்திலும் ஈஸ்டர்தாக்குதலால்பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைந்தது. அதன் பிறகு இந்த நாடு எப்படி வங்குரோத்து அடைந்தது என்பது இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும். ரணில்தான் இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் மீண்டும் வங்குரோத்தாகி இருந்த நாட்டை மீண்டும் வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றினார்.

இன்னும் ஐந்தாண்டுகளுக்கு அவருடைய வேலைத்திட்டத்தை தொடரும்வாய்ப்புஉருவாகியுள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் தற்போதைய ஜனாதிபதி எவ்வாறு செயற்பட்டார் என்பது மக்களுக்கு தெரியும். இந்தஜனாதிபதித்தேர்தலில் எந்த வேட்பாளரை நியமித்தாலும் ரணில் விக்கிரமசிங்க மக்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மீண்டும் நியமிக்கப்படுவார் என்பதை நாம் அறிவோம். அவரது வெற்றி நிச்சயம்.

ஐக்கிய தேசிய கட்சியின் வரையறுக் கப்பட்ட குழு எங்களிடமிருந்து விலகிச் சென்றுள்ளது. இந்த நாட்டை சரியான இடத்திற்கு கொண்டு வரவும், இந்த நாட்டின் பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்பவும், அபிவிருத்தி நன்மைகளை பெறவும் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு கட்சியினரை கேட்டுக்கொள்கின்றோம்.

இன்றைக்கு ஐக்கிய மக்கள் சக்தியில்பிரமாண்டமானகாட்சியை வைத்து மாபெரும் கூட்டணி உருவாகும் என்று சொன்னாலும் அவர்களைச் சுற்றி முன்னாள் ஆட்கள் குவிந்துள்ளனர். தேர்தல் அனல் பறக்கும் கூட்டணியில் இருக்கும் பலர் எதிர்காலத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பார்கள் என்பதில் உறுதியாக உள்ளோம்.

நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு கடந்த இரண்டு வருடங்களாக மொட்டு அணியினர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்கிய ஆதரவிற்கு நன்றி தெரிவிக்கின்றோம். நாமல் ராஜபக்ச இளைஞனாக இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார். இன்று கீழ்மட்ட மக்கள் எப்படி நினைக்கிறார்கள் என்பதை நாமல் ராஜபக்சதெரிந்துகொள்ளவேண்டும்.

மொட்டுவவிற்கு வாக்களித்த கிராமத்தில் உள்ள பலர் இன்று ரணில் விக்கிரமசிங்கவுடன் இருக்கின்றார்கள். அதனாலேயே மொட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஜனாதிபதியைச்சுற்றிக்குவிந்துள்ளது. ரணில்விக்கிரமசிங்கவுக்குசஜித்தோ அல்லது நாமலோ சவாலானவர்கள் அல்ல.

ரணில் விக்கிரமசிங்க இன்று பாராளுமன்றத்தில் தனி நபராக ஒரு ஆசனத்தைப் பெற்று நாட்டின் தலைவரானார். கடந்த காலங்களில் ரணில்விக்கிரமசிங்க மீது பல்வேறு குற்றச்சாட்டுகளைமுன்வைத்தபலர் தற்போது அவர் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தை சரியென ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அன்றுரணில்விக்கிரமசிங்கவை எமது தரப்பிலிருந்து பாதுகாத்த அணியினர் இன்று குற்றம் சுமத்துகின்றனர். இது போன்ற செயல்கள் அவர்களின் அரசியல் இலாபத்துக்காகசெய்யப்படுகின்றன என்றார்.

## லால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டக்காரர்களை நாடாளுமன்றத்தை நோக்கி திசை திருப்ப முயற்சித்தமைதோல்வியடைந்ததாக லால்காந்த தெரிவித்தமை தொடர்பிலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டது.

முன்னதாக தாம் வெளியிடும் கருத்துக்களில் சிக்கல் இருப்பின் அது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யுமாறு கடுகண்ணாவ பிரதேசத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த லால்காந்த தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் 6....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கானபலஸ்தீனதூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச்.ஸைத் மற்றும், ஐக்கிய நாடுகள் சபைக்கானநிவாரணப்பணிமுகவர் நிறுவனத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோட்டா ஆகியோரிடம் ஜனாதிபதி கையளித்தார்.

போர் காரணமாக காஸாவில் சிக்கியுள்ள சுமார் ஒரு மில்லியன் சிறுவர்களின் அத்தியாவசிய செலவுகளை பூர்த்தி செய்வதற்காக இலங்கை அரசு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்குவது தொடர்பில் 2024 ஆம் ஆண்டு மார்ச் 4 நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

கடந்த இப்தார் நிகழ்வுகளை நடத்துவதற்காக அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களால் ஒதுக்கப்பட்ட நிதியை இந்த நிதியத்திற்கு வழங்குமாறு ஜனாதிபதி விடுத்தவேண்டுகோளுக்குஇணங்க, அந்த நிதியத்திற்கு கிடைத்த ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதற்கட்டமாக 04.-01.-2024 அன்று பலஸ்தீன அரசிடம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க, வர்த்தக நிறுவனங்கள், பல்வேறு அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இந்த நிதியத்துடன் கைகோர்த்து, நிதியத்திற்கு பங்களிப்பதற்கு அவகாசம் வழங்கப்பட்டதோடு அந்தக் காலக்கெடு 2024 ஜூலை 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. அதுவரை நிதியத்திற்குக் கிடைத்த ஐந்துஇலட்சம்(590,000)அமெரிக்க டொலர் தொகை நேற்று பலஸ்தீன அரசிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பதில் வெளிவிவகார அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

### முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர்

# வாஸ் குணவர்த்தனவின் தண்டனை உறுதியானது

முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட 6 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உயர்நீதிமன்றம் நேற்று உறுதி செய்துள்ளது.

2013 ஆம் ஆண்டு வர்த்தகர் மொஹமட் ஷியாம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில்முன்னாள்பிரதிப்பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன, அவரது மகன் ரவிந்து குணவர்தன மற்றும் 4 பொலிஸ் அதிகாரிகள் என ஆறு பேருக்கு நீதிமன்றம் தூக்குத் தண்டனையை விதித்திருந்தது.

இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்த உயர்நீதிமன்றம் அந்த மனுக்களை தள்ளுபடி செய்துள்ளதுடன் தூக்குத் தண்டனையைஉறுதிசெய்துள்ளது.

மற்றுமொரு வழக்கில் 2009 ஆம் ஆண்டு மாலபை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவரை கடத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் வாஸ் குணவர்தன, அவரது மகன் மற்றும் மேலும 3 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 4 வருட சிறைத் தண்டனை விதித்துள்ளது.

# தாய், சேய் இறப்பு தொடர்பான தேசிய அலுவலகம் நிறுவப்படும்

### சுகாதாரத்துறை அமைச்சர் அறிவிப்பு

தாய்-சேய் இறப்புத் தொடர்பான தேசிய அலுவலகம் ஒன்றை நாட்டில்ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மருத்துவ திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதானவிவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

உயிர் பாதுகாப்பு மருந்துகள் அனைத்தும் சுகாதாரத் துறையில் உள்ள நிலையில் 52 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. அதற்குப்பதிலாகஉபயோகிக்க கூடியமருந்துகள்நாட்டின்அனைத்து வைத்தியசாலைகளிலும் உள்ளன.

வெளிநாடுகளில் மருத்துவ பட்டப்படிப்பை மேற்கொண்டு நாடு திரும்புவோருக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதேவேளை, பொருளாதார நெருக்கடிகாரணமாக நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்ற மருத்துவர்கள்மீண்டும்இலங்கைக்கு திரும்புவதற்கு தீர்மானம் எடுத்துள்ளமையையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அவர்களை நாங்கள்வரவேற்கிறோம். சுகாதாரத் துறையில் விசேட மருத்துவர்களின் தட்டுப்பாடு காணப்படுகிறது.

அந்த வகையில் வெளிநாடுகளில் மருத்துவ பட்டப்படிப்பை மேற்கொண்டு நாட்டுக்கு வருகை தரும்போது அதனை இங்கு ஏற்றுக் கொள்ளாத நிலையில் அவ்வாறானவர்கள் அசௌகரியங்களுக்கு உட்படுகின்றனர். அந்த வகையில் உலகில்முன்னணியிலுள்ளஆயிரம் மருத்துவ பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றவர்கள் நாட்டிற்கு வந்து சேவை செய்ய முடியும்.

நாட்டில் சிறந்த சுகாதாரத் துறையைக் கொண்ட நாடுகள் ஆசியாவில் உள்ளன. அதில் எமது நாடு47வதுஇடத்தில்காணப்படுகிறது என்பதுமகிழ்ச்சிக்குரியவிடயமாகும். 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் எத்தகைய பிரச்சினைகள் இருந்தபோதும்சுகாதாரசேவையின் அபிவிருத்திக்கு அனைத்து ஆளும் தரப்புகளும் நடவடிக்கை எடுத்துள்ளன. அந்த வகையில் சுகாதாரத்துறைக்காக ஒதுக்கப்படும் நிதியும் அதிகரித்து வருகிறது.

எமது நாட்டில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்சுகாதாரத்துறையில்அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். தற்போது நாட்டில் 52 மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவினாலும் அதற்குப்பதிலாகஉபயோகிக்ககூடிய மருந்துகள் அனைத்து வைத்திய சாலைகளிலும் உள்ளன. கடந்த காலங்களில் சுகாதாரத்துறையில் நிலவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன.

கடந்தகாலங்களோடுஒப்பிடுகையில் டெங்கு இறப்புகள் வெகுவாக குறைந்துள்ளன. டெங்கு நோய் தாக்கமும் வெகுவாகக் குறைந்துள்ளது. அந்தவகையில்நாட்டின்சுகாதாரத்துறையைமேம்படுத்துவதற்காக கடந்த வாரம் 9 சட்ட மூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தாய்-சேய் இறப்புத் தொடர்பான தேசிய அலுவலகம் ஒன்றை நாட்டில்ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நோயாளர்களின் பாதுகாப்புக்காக தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம். நோய் கட்டுப்பாட்டு மத்திய நிலையம் ஒன்றை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் 30 ஆம் திகதிய போராட்டத்துக்கு அழைப்பு

பன்னாட்டுச் சமூகத்தின் நீதிக்கான தலையிடலை வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30 ஆம் நாளன்று நாம் முன்னெடுக்கவுள்ள போராட்டத்திற்கு நிலத்திலும் புலத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ள அமைப்புக்களும் பிரதிநிதிகளும், மக்களும் ஒத்துழைப்பை வழங்குமாறு வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் போராட்டத்திற்கான பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசேட ஊடக அறிக்கையும் வெளியிடப்பட்டது. அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட இனவழிப்புக்கு சர்வதேச விசாரணை வழியாகவே நீதி வழங்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி நிற்கின்றோம். 2,700 நாள்களை கடந்தும் கடந்த 15 ஆண்டுகளாகவும் தெருவில் நின்று எம் பிள்ளைகளின் விடுதலைக்கும் நீதிக்குமாக தொடரும் போராட்டத்தை ஶ்ரீலங்கா அரசால் ஒருபோதும் அடக்கி ஒடுக்க முடியாது. பன்னாட்டு நீதி கிடைக்கும் வரை எங்கள் போராட்டம் தொடரும் என்பதையும் நாம் மீண்டும் ஶ்ரீலங்கா அரசுக்கு நினைவுபடுத்துகின்றோம்.

ஓகஸ்ட் 30 ஆம் நாள் பன்னாட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகும் அன்றைய நாளில் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீதிக்கும் விடுதலைக்குமான போராட்டத்தை நடத்த இருக்கின்றோம். அது தொடர்பான தெளிவுபடுத்தலாக இந்த அறிக்கையை வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினராகிய நாம் ஊடகங்களுக்கு வெளிப்படுத்துகின்றோம்.

உலகமெங்கும் காணாமல் ஆக்கப்படுதல் என்பது ஓர் ஆயுதமாகவே கையாளப்படுவதாக ஐ.நா. கூறுகின்றது. அதாவது ஜனநாயகத்திற்கு எதிரான - மனித உரிமைகளுக்கு எதிரான - இனங்களுக்கு எதிரான ஓர் ஆயுதமாகப் பிரயோகிக்கப்படுகின்றது. அந்த வகையில் உலகம் முழுவதும் பல லட்சக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

சில நாடுகளில் அதன் ஜனநாயத்திற்கு எதிரான - மக்கள் விரோதப் போக்கிற்கு - திராக செயற்படுகின்ற நபர்கள் குடும்பம் குடும்பமாகவும் தனி உறுப்பினர்களாகவும் காணாமல் ஆக்கப்படுகின்றனர். அந்த வகையில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய சரியான புள்ளி விவரங்களைத் தொகுத்துக்கொள்ளுவதற்கு அந்த நாடுகள் திட்டமிட்ட அடிப்படையில் ஒத்துழைப்பு வழுங்கமாமல் புள்ளி விவரங்களை மறைத்து வருவதாகவும் ஐ.நா. கூறுகிறது.

போர், பஞ்சம், வன்முறை போன்ற சூழலில் காணாமல் ஆக்கப்படுதல்கள் சமூக அவலத்தை ஏற்படுத்தியுள்ளன. முதலாம் உலகப் போரிலும் இரண்டாம் உலகப் போரிலும் தொடங்கிய காணாமல் ஆக்கப்படுதல் என்பது உலக அளவில் பரந்து விரிந்து செல்கிறது.

அந்த வகையில் அர்ஜன்டீனா, ஶ்ரீலங்கா, வியட்னாம், குர்திஸ்தான், ஆப்கானிஸ்தான், பர்மா போன்ற பல நாடுகளில் இனங்களுக்கும் சமூகங்களுக்கும் எதிரான ஆயுதமாகக் கையாளப்படுகின்றது.

போரில் கொல்லப்பபடுவதை விடவும் ஓர் இனத்திற்கு நீண்ட துயரத்தையும் நீண்ட அழிவையும் நீண்ட மனச் சிதைவுகளையும் ஏற்படுத்தவே காணாமல் ஆக்கப்படுதல் என்பது கொடூரமான ஆயுதமாகப் பிரயோகிக்கப்படுகிறது. ஈழத்தைப் பொறுத்தவரையில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது முள்ளிவாய்க்காலிலோ, அதற்கு முந்தைய சில ஆண்டுகளிலோ தொடங்கிய நிகழ்வல்ல.

ஈழத் தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரி போராடத் தொடங்கிய காலத்தில் இருந்தே வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது இன ஒடுக்குமுறையின் ஓர் ஆயுதமாகக் கையாளப்பட்டு வந்துள்ளது. 1996 ஆம் ஆண்டு ஐ.நா. அறிக்கையின்படி -

1980- 96 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 11,513 பேர் காணாமல் போயிருப்பதாகவும், 1996 ஆம் ஆண்டு ஆசிய மனித உரிமை ஆணையகத்தின் அறிக்கைப்படி, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் 16,742 என்றும் கூறப்பட்டுள்ளது. எனினும் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாக இருக்கலாம் என்பதை இலங்கை மனித உரிமை செயற்பாட்டாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதற்குப் பிந்தைய காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெள்ளைவான் கடத்தல் வாயிலாக மாத்திரம் வடக்கு கிழக்கில் மாத்திரமின்றி தென்னிலங்கையிலும் வசித்த பல ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

அதாவது முள்ளிவாய்க்காலுக்கு முந்தைய காலத்தில்கூட தமிழ் இளைஞர்களை அடக்கி ஒடுக்கவும் ஆயுதப் போராட்டத்தின் மீது அச்சத்தை ஏற்படுத்தவும் இளைஞர் சக்தியை இல்லாமல் செய்யவும் ஈழத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுதல் என்பது கட்டமைக்கப்பட்ட ரீதியில் ஶ்ரீலங்கா அரசின் இயந்திர நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் இனவழிப்புப் போரின் போது சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் ஒரு லட்சம் பேரளவில் இறுதிப்போரில் இனவழிப்பு செய்யப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றது.

இப்போரில் சுமார் ஐம்பதாயிரம் பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 21 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கையளிக்கப்பட்டும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்டு தமிழ் மக்கள் அழிக்கப்பட்டதைப் போன்றே இன்னொரு உபாயமாக காணாமல் ஆக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் போதும் இறுதியாக முள்ளிவாய்க்காலிலும் அதன் பின்பும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதையே இன்று ஈழத் தமிழ் மக்கள் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சரணடைந்தவர்கள் இறந்துவிட்டார்கள் என்றும் சரணடைந்தவர்கள் இப்போது இல்லை என்றும் மழுப்பல் பதில் கூறுகின்ற ஶ்ரீலங்கா அரசாங்கம் அவர்களை என்ன செய்தது என்பதை இந்த உலகத்திற்கு அறிவிக்க வேண்டும்? அவர்கள் எப்படி வலிந்து இல்லாமல் செய்யப்பட்டார்கள் என்றும் இவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் சிங்கள அரசு அறிவிக்க வேண்டும்.

கொன்றழிக்கப்பட்ட நிலையில் ஈழ இறுதிப் போரில் 59 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் ஶ்ரீலங்கா அரசிடம் கையளிக்கப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பல நூற்றுக் கணக்கான குழந்தைகள் முள்ளிவாய்க்காலில் 21 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுடன் 59 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் சரணடைந்துள்ளனர். இவர்களுக்கும் என்ன நடந்தது என்பதைச் சொல்ல வேண்டும் என்றே ஈழத் தமிழ் இனம் போராடுகிறது.

59 இற்கும் மேற்பட்ட குழந்தைகளை வலிந்து காணாமல் ஆக்குவதன் வாயிலாக உலகில் குழந்தைகளை வலிந்து காணாமல் ஆக்குவதில் முதல் தர நாடு என்ற பெருமையை சிங்கள தேசம் பெற்றுள்ளது. குழந்தைகளின் உரிமை தொடர்பிலும் இனவழிப்பு தொடர்பிலும் வரைவிலக்கணங்களை கூறுகின்ற ஐக்கிய நாடுகள் சபையும் இன்ன பிற நிறுவனங்களும் சிங்கள இனவழிப்பு அரசை மயிலிறகால் தடவுவதே உலக மக்களுக்கு வேதனை தருகின்ற விடயமாகும்.

இந்த நிலையில் ஈழ மண்ணில் ஶ்ரீலங்கா அரசால் இனவழிப்பு நோக்கத்திற்காக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளின் விடுதலை மற்றும் நீதியை வலியுறுத்தி பன்னாட்டுச் சமூகத்தின் நீதிக்கான தலையிடலை வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30 ஆம் நாளன்று நாம் முன்னெடுக்கவுள்ள போராட்டத்திற்கு நிலத்திலும் புலத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ள அமைப்புக்களும் பிரதிநிதிகளும், மக்களும் ஒத்துழைப்பை வழங்குமாறு அன்பாக வேண்டி நிற்கின்றோம் என அறிவிக்கப்பட்டுள்ளது.(05)

## பாடசாலைகளுக்கு அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்பட்டன





(பி.கேதீஸ்)

சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் ஊடாக தலவாக்கலை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் சிலவற்றுக்கு கணனிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகள் தலவாக்கலை விடுதியில் நடைபெற்றன.

இதன்போது சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் தலைவர் நேசன் சங்கராஜி, அதன் செயலாளர் ஏ.கமலாநந்தன், அதன் மத்திய மாகாண இணைப்பாளர்களான ராஜ்குமார், ஆமஸ்ரோங் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.(05)

## 5 ஆயிரம் ரூபாவுக்கு சோரம் போனவர்களா ஊடகவியாளர்? லக்ஷ்மன் கிரியெல்லவின் கருத்து அடிப்படையற்ற ஒன்றே!

### சிரேஷ்ட ஊடகவியலாளர் றிஷாட் ஏ.காதர் காட்டம்

(எஸ்.அஷ்ரப்கான்)

ஊடகவியலாளர்கள் 5000.00 ரூபாவுக்கு சோரம் போனவர்கள் என நாடாளுமன்றில் கூறிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவின் கருத்து அடிப்படையற்றது, கீழ்த்தரமானது என ஊடகவியலாளர் றிசாத் ஏ காதர் தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு வழங்கிய ஊடக அறிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கையில் -

கடந்த 2024.08.05 ஆந் திகதி பிராந்திய ஊடகவியலாளர்களை தலைநகரில் ஜனாதிபதி சந்தித்திருந்தார்.

இலங்கையின் வரலாற்று நெடுகிலும் பத்திரிகை நிறுவனங்களின் பிரதம ஆசிரியர்களை அழைத்து கலந்துரையாடிய நிகழ்வுகளே நிரம்பி வழிந்தது. ஆனால் பிராந்திய ஊடகவியலாளர்களின் கோரிக்கையை அரச தலைவர்களோ, பொறுப்பான அமைச்சர்களோ அல்லது அரசியல்வாதிகளோ கண்டுகொள்வதில்லை. இப்படியான தருணத்தில் பிராந்திய ஊடகவியலாளர்களின் குரல்களில் உள்ள சத்தங்களை வெளிக்கொணர சந்தர்ப்பம் கிடைத்தமை ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

பிராந்திய ஊடகவியலாளர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படலாம் அல்லது நிறைவேறாமல் போகலாம். ஆனால் பிரச்சினைகளை சொல்வதற்கான களம் மிக முக்கியமானது. அதுவே இங்கு நடந்துள்ளது. இதனை மலினப்படுத்தி தேசத்தின் காவலர்களாக இருக்கின்ற ஊடகவியலாளர்களை நாட்டின் உயரிய சபையில் தரக்குறைவாக பேசிய விடயம் கண்டிக்கப்படவேண்டியது மட்டுமல்ல அந்தக் கருத்தை அவர் அதே சபையில் மீளப்பெறவும் வேண்டிய விடயம் ஆகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி வேட்பாளர் என்பதற்கு அப்பால் இந்த தேசத்தில் இப்போதும் ஜனாதிபதி. எல்லாத்தரப்பினருடைய குரல்களுக்கும் செவிசாய்க்கும் தார்மீகக் கடமை அவருக்கு உண்டு. அந்த அடிப்படையிலே நாட்டினுடைய ஜனாதிபதி பிராந்திய ஊடகவியலாளர்களை சந்தித்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவின் கட்சித் தலைவர் தனது பதவிக் காலத்தில் அல்லது எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகிக்கின்ற காலத்தில் எப்போதாவது பிராந்திய ஊடகவியலாளர்களை அணுகி பிரச்சினைகளைக் கேட்டறிந்தது உண்டா. 5000 ஆயிரம் ரூபாவுக்குள் ஊடகவியலாளர்களின் கௌரவத்தை மலினப்படுத்தியிருப்பது மிகுந்த வேதனைக்குரிய விடயமாகும்.

நான் ஊடகத்துறைக்குள் நுழைந்து 12 வருடங்கள் ஆகின்றன. ஆனால் தேசத்தின் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏற்படுத்தப்பட்ட சந்திப்பே முதலாவதாகும், இப்படி 30, 40 வருட ஊடக அனுபவமுள்ளவர்களுக்கும் இதுவே முதற்தடவையாக அமைந்தது. இந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தொழில் உறவுகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுசநாணயக்காரவுக்கு ஊடகவியலாளர்கள் தத்தமது நன்றிகளைத் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக இருந்த நிலையில் கொழும்பு மாவட்ட ஊடகவியலாளர்களை இதே ஹோட்டலில் சஜித் பிரேமதாஸ சந்தித்திருந்தமை தேர்தல் சட்டங்களை மீறிய விடயம் என்பது ஞாபகமில்லாமல் போயுள்ளது லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு.

எனவே, இந்த மலினமான அரசியல் செய்வதை நாடாளுமன்ற உறுப்பினர் தவிரத்துக்கொள்ள வேண்டும் என அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட் டுள்ளார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir


## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சா'ாமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


# அடிபட்டுப்போகும் தூய்மைவாதக் கோட்பாடு

**2024 அரசுத் தலைவர் தேர்தல் இலங்கையில் இடியப்பச் சிக்கல் நிறைந்தது. பாரம்பரியமான கட்சிகள் உடைந்து புதிய கட்சிகள் தோற்றம்பெற்ற ஒரு பின்னணியில், எந்தக் கட்சியும் தன்னைத் தூய்மையானதாக முன்னிறுத்த முடியாத இக்கட்டான இடியப்பச்சூழலுக்குள்சிக்கிக்கொண்டுள்ளன. கொள்கை அடிப்படையில் தமது தனித்துவத்தை முன்னிறுத்தி மக்களின் ஆதரவைக் கோர முடியாத சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஒவ்வொரு கட்சியும் ஏற்ற இறக்கங்களைக் கொண்டிருந்தபோதும் எதுவும் இதற்கு விதிவிலக்கல்ல என்கிற நிலைதான் இருக்கின்றது.**

**சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தம்மைத் தூய்மை நிறைந்ததாகக் காட்ட முற்படுகின்றது. ஆனால், அது தமது ஒரு பகுதிதான், முன்னர் இதே ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாத்த இவர்கள்தான் இன்றுரணில்மீது குற்றஞ்சாட்டுகிறார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது. அந்த உண்மையைசஜித்தால்மறுக்கவும்முடியாது. ஏனெனில் ரணில் தலைமையிலான கட்சியிலும் ஆட்சயிலும் பங்காளியாக இருந்தவர்தான் அவரும் அவரோடு இருக்கும் பல நாடாளுமன்ற உறுப்பனர்களும். இன்னும் சொல்லப்போனால் ரணிலின் வெற்றி உறுதியானது என்று தெரிந்தால் மீண்டும் ஓடிச்சென்று அவரோடு ஒட்டிக்கொள்ளக்கூடியவர்கள்தான் அவர்களில் பெரும்பாலானவர்கள்.**

**மறுபுறத்தில் பொது ஜன பெரமுன தனது இளம் தலைவர் நாமல் ராஜபக்சவை அரசுத் தலைவர் தேர்தலில் களமிறக்கிவிட்டுள்ளது. ரணிலின் கொள்கையை விமர்சனத்தோடு அணுகுகிறார் நாமல். ஆனால் அதே நாமலும் சேர்ந்துதான் என்னை அரசுத் தலைவராக்குவதற்கு வாக்களித்தார் என்கிற ரணிலின் வாதம் நியாயமானதே. கொள்கை ரீதியாகத் தாம் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மாறுபட்டவர்கள் என்று நாமல் கூறமுற்படுவதை, ரணிலோடு அவர்கள் நடத்திய இரண்டு வருட கால அரசாட்சி வாழ்க்கை கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாக்கும்.**

**இந்த இரு தரப்பிலிருந்தும் ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பொது ஜன பெரமுன, ஐ.தே.க, ஐ.ம.ச. என்று எல்லாவற்றையும் ஊழலின் பங்காளிகள் என்று கூறி அவற்றுடன் தமக்கு உறவில்லை என்று தன்னைத் தூய்மை வாதத்திற்குள் புதைக்கப் பார்க்கின்றது. ஆனால், அது இன்று நிராகரிக்கும் பொது ஜன பெரமுனவிற்கு தலைமைத்துவம் வழங்கும் ராஜபக்சக்கள் இந்தளவிற்கு வளர்வதற்கான இடத்தை வழங்கியது ஜேவிபிதான் என்பது மறக்கப்படமுடியாத உண்மை. மகிந்தவை அரசுத் தலைவராக்குவதில் ஜேவிபியின் பங்கு அளப்பரியது. மகிந்தவின் போர் வெற்றியிலும் ஜேவிபின் பங்கு மிகப் பெரியது. அப்படியிருக்கும்போது அந்தக் கட்சியும் தம்மைத் தூய்மைவாதத்திற்குள் சேர்த்துக்கொள்ள முடியாது.**

**இந்தப் பக்கம் தமிழர் தரப்பில், தன்னை விடுதலைப் புலிகளின்நேரடிப்பிரதிநிதியாகவரிந்துகொள்ளும்ஒருவர் அவரால் ஒட்டுக்குழுக்கள், இனப்படுகொலையாளிகள் என்று விமர்சிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டவர்களாலேயே தமிழ் பொது வேட்பாளராக அறிவிக்கப்படுகின்றார். அவரும் அதனை ஏற்றுக்கொள்கின்றார்.**

**இப்படி ஒன்றிலிருந்து ஒன்று சிறந்தது, தூய்மையானது என்று ஒவ்வொரு கட்சிகளும் தம்மைப் பறைசாற்றிக்கொள்ள முயற்சித்தாலும் அவை எவையும் தூய்மைவாதக் கோட்பாட்டுக்குள் தம்மை அடக்கமுடியாத இக்கட்டுக்குள்ளேயே இருக்கின்றன என்பதே முழு உண்மை.**

# குதிரை கொம்பு

## என். சத்திய மூர்த்தி

தமிழ்பொதுவேட்பாளர்என்றகருத்தைநினைத்து பார்த்தாலே, இப்போதெல்லாம் ஒரு பகடி வசனமும் அதனுடன் நினைவிற்கு வருகிறது. பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்த கதைதான் அது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம், போததற்கு தலைநகர் கொழும்புவில் உள்ள தமிழர் பகுதிகளில் வீடுவீடாக ஏறி- இறங்கி, பொதுவேட்பாளருக்கு ஆள்பிடிப்பதுமட்டும்தான்நடந்ததாகத்தெரியவில்லை. மற்றபடி, நீ -நான் என்று போட்டி இருக்கும் என்று, அந்த முயற்சியின் பின்னால் இருந்தவர்கள் நினைத்ததுபோக, நான் இல்லை, நீ இல்லை என்ற நிலைமைதான் உருவாகி உள்ளதாக பத்திரிகை செய்திகளை வைத்து உணர முடிகிறது.

இன்னும்சொல்லப்போனால், இந்த 'பிள்ளையார் பிடிக்கப்போய்...' வசனமே இந்த சூழ்நிலையில் தவறான பிரயோகமோ என்று தோன்றுகிறது. பொதுவேட்பாளர் கருத்தியலே தவறு என்று பல தமிழர்களும் கருதுவதாகவே இப்போது(ம்) தோன்றுகிறது. அவ்வாறானால், அவர்கள் மண் எடுத்துபிடிக்கநினைத்ததேபிள்ளையார்இல்லையோ, என்ற கேள்வி எழுகிறது. அவ்வாறானால், குரங்கு பிடிக்க போய், அதுவும் முடியாமல் போனதோ, என்ற வருத்தம் எழுகிறது.

இப்போதும் சரி, எப்போதும் சரி, தமிழ் பொது வேட்பாளர் எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெற்று நாட்டின் ஜனாதிபதி ஆகிவிடுவார் என்று யாருமே கருதவில்லை. ஆனால், அத்தகைய கருத்தியலை முன்வைத்து ஒரு வேட்பாளரை களமிறக்கி, தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும் என்ற தணியாத ஆசை இங்கு சிலருக்கும் புலம்பெயர்ந்தோரில் பலருக்கும் இருந்ததாகக் கருதமுடிகிறது.

இப்போது என்னவென்றால், முதலுக்கே மோசம் என்ற நிலைமை உருவாகி உள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர், அல்லது அதற்கு முன்னரேகூட, தமிழ் தேசியம் என்ற கருத்தியலுக்கு தமிழ்மக்களிடையேஆதரவுஇல்லைஎன்றநிலைக்கு பொதுவேட்பாளரின் வாக்கு சதவீதம் கொண்டு தள்ளிவிடும் என்றே எண்ணத்தோன்றுகிறது. அல்லது பயப்பட தோன்றுகிறது.

### இதோ வருது, அதோ வருது

இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில், இதோ வருது, அதோ வருது என்ற கதையை அவிழ்த்துவிட்டே தமிழ் அரசியல் தலைமைகள் காலம் கடத்தி வந்தனர். எங்காவது அவர்கள் மனசாட்சிபடி நடந்து விடுவார்களோ என்று புலம்பெயர்ந்தோர் அணிகள், அவர்கள் மீது சமூக- அரசியல் அழுத்தங்களை தொடர்ந்து கொடுத்து வந்தன. அதன் ஒரு பகுதியாகவே, இப்போதும் இந்த பொதுவேட்பாளர் விளையாட்டு எல்லாம்.

நாடெங்கிலும் தன்னை சம்மந் தனின் வாரிசு தலைவர் என்று அறிமுகப்படுத்திக்கொள்ளாதமட்டில் வலம் வந்தவர் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன். ஒரு காலகட்டம் வரை, பொதுவேட்பாளர் பிரச்சினைக்கு ஆதரவாகவே நகர்வுகளை முன்னெடுத்தார். ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பின்னர், அவரும் சரி, அவருடன் சேர்ந்த புளொட் தலைவர் சித்தார்தன் போன்றோரும் சரி, அந்த கருத்தியலிலேயே தீவிரம் காட்டுகின்றனர் போன்று தெரியவில்லை.

இதைவிட முக்கியம் ரெலோவின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான வினோ நோகராதலிங்கம் பொதுவேட்பாளர் தீர்மானத்திற்கு தனது ஆதரவு இல்லை என்று தெள்ளத்தெளிவாகவே அறிவித்துவிட்டார். பொதுவேட்பாளர் குறித்து, ரெலோ கட்சிக்குள் உள்வீட்டு விவாதங்கள் நடைபெற்றதா, அவற்றில் வினோ நோகராதலிங்கம் அவர்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டதா, என்பது தெரியவில்லை. ஆனால், பொது வேட்பாளரை ஆதரிக்கும் தமிழ் சிவில் சமூக பிரதிநிதிகள் தவிர்த்த ஏழு கட்சிகளில் எதிலும் பெரிதாக இது குறித்து உள்கட்சி விவாதம் நடக்கவில்லை என்றே தெரிகிறது.

அவ்வாறான விவாதங்கள் நடைபெற்ற தமிழ் அரசு கட்சியின் தலைவர்கள், தாங்கள் தடலாடியாக எந்தவொருமுடிவையும்எடுக்கப்போவதில்லைஎன்று அறிவித்தனர். ஜனாதிபதித் தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ் அரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், பொதுவேட்பாளர் திட்டத்திற்கு தனது எதிர்ப்பைத் தெளிவாகவே எடுத்துரைத்து வருகிறார். தனது கருத்தேகட்சியின்கருத்தும்என்ற தொனியில் இருக்கும் அவரது பேச்சை இதுவரை உள்ளிருந்து யாரும் மறுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுமந்திரன் இப்படியென்றால், தமிழ் அரசு கட்சிக்குள் அவருக்கு எதிராக களமாடும் சிறீதரன் அவருக்கும் ஒரு படி மேலே சென்று விட்டார். பொதுவேட்பாளர் விடயத்தில் முடிவு எடுப்பதற்கு முன்னர், கட்சியைச் சேர்ந்த யாராவது அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டால், தமிழ் அரசு கட்சியில் இருந்து அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று சிறீதரன் தெரிவித்தார் என்று செய்திகள் கூறுகின்றன.

எது எப்படியோ, தமிழ் அரசுக் கட்சித் தலைவர் ஒருவரை பொதுவேட்பாளராக அறிவித்து, அவரது உறுப்பினர் பதவியைக் கட்சி பறித்துக்கொண்டால், சிவில் சமூக பிரதிநிதிகள் நினைப்பது போல், அவர் கட்சி சாராத நபராகி விடுவார்தானே! ஆனால், அவ்வாறு ஒரு வேட்பாளர் கிடைத்தாலும் அவரை எதிர்காலத்தில் அரசியல் பணி செய்யக்கூடாது என்ற எதிர்பார்ப்பை எப்படி செயல்படுத்துவது?

### பூவும் மொட்டும்

வேட்பாளர் தேர்வு ஒரு புறமிருக்க, அவர் எந்த சின்னத்தில் போட்டியிட வேண்டும், என்பதிலும் விவாதங்களும் சிக்கல்களும் இருக்கத்தான் செய்கின்றன. இதுவும் எதிர்பார்க்கப்பட்ட ஒரு விடயம் தான். விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் 'மீன்', கட்சி தலைமையே இல்லாத ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் 'குத்து விளக்கு' ஆகிய இரண்டுக்கும் அப்பால், சுரேஷ் பிரேமசந்திரனின் ஈபிஆர்எல்எப் கட்சியின் 'பூ' சின்னமும் பேச்சுகளில் அடிபடுகிறது.

இதில்இரண்டுகேள்விகள், அல்லதுபிரச்சினைகள். அல்லது உண்மைகள். எப்போது பொதுவேட்பாளர் அரசியல் சாராதவராக இருக்க வேண்டும் என்ற கருத்து முக்கியத்துவம் பெறுகிறதோ, அப்போதே, எந்தவொரு அரசியல் கட்சியின் சின்னத்தையும் அவர் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்றுக்கொள்ளக்கூடாது. அவர் சுயேச்சை சின்னத்திலேயே போட்டியிடவேண்டும்.

இரண்டாவது, மிகவும் அரசியல் கலப்பான விடயம். பொதுவேட்பாளர் என்று ஒரு கட்சி தலைவரை தேர்ந்தெடுத்தால், அவர் தனது கட்சி சின்னத்தில் போட்டியிட்டால், அது அவரது கட்சியை வளர்க்க முயல்வதாக அர்த்தம் கொள்ளப்படும். மாறாக, அவர் ஒரு கட்சியில் இருந்து, அவருக்கான சின்னம் வேறு ஒரு கட்சி சார்ந்ததாக இருந்தால், அது அனர்த்தமாகவே முடியும்.

இவர்கள்இருதரப்பினரையும்தவிர்த்து, அரசியல் சாராத பொதுவேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் யாருடைய அரசியல்சின்னத்தில்போட்டியிட முடியும்? இத்தகைய சூழ்நிலையில் அவர் முன்னாள் அல்லது இன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால் மட்டும் சுயேச்சை சின்னத்தில் போட்டியிடுவது தவிர்க்க முடியாத விடயமாகிவிடும்.

இதற்கிடையில், தென்னிலங்கையில், ரணிலை எதிர்த்து, மொட்டு கட்சியும் தனது பங்கிற்கு நாமல் ராஜபக்சாவை களம் இறக்கி உள்ளது. இதற்காக, நாமல் வெற்றி பெறப்போகிறார் என்பதல்ல பொருள். ஏற்கனவே சஜித் பிரேமதாசா, அனுர குமார திசநாயக, மற்றும் தற்போதைய இறக்குமதிகளான சரத் பொன்சேகா மற்றும் விஜயதாச ராஜபக்சா ஆகியோரோடு சேர்ந்து மொத்தம் 23 பேர்களாவது போட்டியிடுவார்கள் என்பது தற்போதைய நிலைமை.

### சிந்தாமல், சிதறாமல்

இந்த பின்னணியில், வடக்கு -கிழக்கு தமிழர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் வாக்குகள் தேர்தல் முடிவுகளை நிச்சயிக்கும் வலிமை பெற்றவை. அவற்றைசிதடிக்கவேண்டுமா, அல்லதுஒருமைபடுத்த முடியுமா, என்பதே கேள்வி. தற்போதைய சூழலில், பொதுவேட்பாளர்என்றஅடையாளத்தில்ஒருமைபடுத்த முயல்வது குதிரை கொம்பே.

அவ்வாறானால், சிந்தாமல், சிதறாமல் அந்த வாக்குகளை, தேர்தல் முடிவுகளை முடிவு செய்யும் முக்கிய கருவியாக தமிழர் தரப்பு கருதி செயல்படுமா? சரி, சமூக- அரசியல் தலைமைகள்தான் பிழை விடுகிறது என்றால், தமிழ் வாக்காளர்கள், தங்களுக்குள் பேசி முடிவெடுக்காமலே அந்த ஒரு புள்ளியை நோக்கி பயணிக்கிறார்களா? அதுவும் பொறுத்திருந்தே பார்க்கப்பட வேண்டிய விடயம்.

# முருங்கை செய்கையாளர்கள் விலை இன்மையால் பாதிப்பு




கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர்பிரிவுக்குஉட்பட்ட பிரமந்தநாறு மயில்வாணபுரம் பகுதியில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் தமது வாழ்வாதாரமாக முருங்கைச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் தற்பொழுது 40 ரூபா 50 ரூபாவுக்கு என கொள்ளளவு செய்யப்படுவதாகவும் தற்பொழுது முருங்கை செய்கையின் அனேகமான விவசாயிகள் தற்பொழு முருங்கை செய்கை அறுவடையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் முருங்கைக் காய்க்கு உரிய விலையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடமும் இதே போன்றும் முருங்கை செய்கையாளர்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தினர் எனவும் குரங்கு காவல் யானைக்காவல் என இரவுபகல் என பாடுபட்டு எந்தப்பயனுமற்றுப்போயுள்ளதாவும் அதே போன்று இவரிடமும் பெரும்பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதாகவும் அறுவடைக்கு தயாராக உள்ள முருங்கையை அறுவடை செய்ய முடியாது கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஏனெனில் அறுவடை செய்யும் பொழுது அதற்கான கூலி பணத்தைக் கூட பெற முடியாத நிலையில் முருங்கைச் செய்கையாளர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமது பகுதியில் நூற்றுக்கும் அதிகமான முருங்கைச் செய்கையினை மேற்கொண்டு வருவதாகவும் அரசாங்கத்தால் எமக்கொரு உரிய விலையைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் அப்படி பெற்றுத் தர முன்வராத பட்சத்தில் தாம் முருங்கைச் செய்கையில் இருந்து முற்று முழுதாக விடுபட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் முருங்கை செய்கையாளர்கள் தெரிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் எமது பகுதியில் உள்ள முருங்கைச் செய்கையாளரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் எமது பகுதி விவசாயிகளுக்கு உரிய விலையைப் பெற்றுதர வேண்டுமெனபாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளார். (05- 113)

# கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்த கவிதை நூலில் இடம்பிடித்த கவிஞர் பொத்துவில் அஸ்மின் கவிதை





(எம். எப். றிபாஸ்)

கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்த 'கலைஞர் 100 கவிதைகள் 100' கவிதை நூலின் அறிமுகவிழா அண்மையில் சென்னை கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கலைஞர் நூற்றாண்டு விழா நிறைவை முன்னிட்டு தொகுக்கப்பட்டுள்ள இத்தொகுப்பில் தமிழினம் மிகச்சிறந்த 100 கவிஞர்களது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த தமிழ் கவிஞர்கள் எனப்போற்றப்படும் புரட்சி கவிஞர் பாரதிதாசன்,

கவியரசர் கண்ணதாசன், அ.மருதகாசி, கவியோகி சுத்தானந்த பாரதி, கவிஞர் சுரதா, கவிக்கோ அப்துல் ரஹ்மான், வாலிபக் கவிஞர் வாலி, ஈரோடு தமிழன்பன், கவிஞர் அ.முத்துலிங்கம், மு.மேத்தா, உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன்,

பிறைசூடன், பழனிபாரதி, நா.முத்துக்குமார், வித்தகக் கவிஞர் பா.விஜய், கபிலன், விவேகா, மனுஸ்ய புத்திரன், சல்மா, இயக்குனர் சீனுராமசாமி, இயக்குநர் லிங்குசாமி என நீளும் இந்தப் பட்டியலில் பிரபல இலங்கை கவிஞர், தமிழ் திரைப்பட பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மின் எழுதிய 'திருக்குவளை சூரியன்' என்ற கவிதையும் இடம்பெற்றுள்ளது.

இந்த நூலின் வெளியீட்டு விழா கலைஞர் நினைவு நாளான 07-8-2024 புதன்கிழமை காலை முதலமைச்சர் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட திராவிட கழகத்தலைவர் ஆசிரியர் கி.வீரமணி பெற்றுக்கொண்டார்.

இத்தொகுதியின் அறிமுக விழா கலைஞர் அரங்கில் அதேதினம் மாலை 6 மணிக்கு கவிப்பேரரசு வைரமுத்து தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு கவிஞராக அழைக்கப்பட்ட கவிஞர் பொத்துவில் அஸ்மினுக்கு தமிழ் நாடு நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு பிரதி வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இது பற்றி நாம் அவரிடம் கேட்ட போது -

இலங்கையில் அதிகமான தமிழ் கவிஞர்கள் வாழும் மாகாணம் கிழக்கு மாகாணம். நாட்டார் பாடலை நயம்பட பாடக்கூடியவர்கள் எம்பிராந்திய மக்கள். இங்கு மீனே பாடும். நான் பாடுவதில் ஆச்சரியம் இல்லை.

என் முற்றத்திலும் என் ரத்தத்திலும் கவிதை ஊறிக்கிடந்ததால்தான் நானும் கவிஞனானேன்.

என் மானசீக குரு கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் கவிதைகளால் ஆகர்சீகப்பட்டு 1997 ஆம் ஆண்டு கவிதை உலகுக்குள் நுழைந்தேன்.

என் கவிக்குழந்தை பருவத்தில் கவிப்பேரரசு அவர்களின் கவிதைகளை நடைவண்டியாய் எண்ணி நடைபழகியவன் நான் என்பதை என்றுமே மறவேன்.

2012 இல் 'நான்' திரைப்படத்தில் நான் பாடலாசிரியராய் அறிமுகமானேன். என்னுள் நம்பிக்கை விதையை விதைத்து, நான் அழும்போதெல்லாம் என்னைத்தேற்றி, எனக்குள் இருக்கும் என்னை கண்டுபிடித்து வெளியே கொண்டு வந்தது கவிப்பேரரசு எழுதிய 'இதுவரை நான்' என்றால் மிகையில்லை.

2013 இல் வெளிவந்த எனது 'பாம்புகள் குளிக்கும் நதி' கவிதை நூலுக்கு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் வாழ்த்துரை வழங்கியிருந்தார்.

2024 இல் இன்று அவர் தொகுத்திருக்கும் கலைஞர் அவர்களது வரலாற்று கவிதை நூலில் எனது கவிதையும் இடம்பெற்றுள்ளது.

இது சிலரை பொருத்தவரை இது சாதாரணமாகக்கூட தெரியலாம். ஆனால் என்னைப்பொறுத்தவரை வாழ்நாள் சாதனையாக கருதுகின்றேன்.

லட்சத்துக்கு அதிகமான கவிஞர்கள் இருக்கும் தமிழ் இலக்கிய சூழலில் 100 கவிஞர்களுக்குள் நானும் உள்வாங்கப்பட்டிப்பது எனது 27 ஆண்டுகால அயராத உழைப்புக்கு கிடைத்த பெரும் பரிசாகவே நான் பார்க்கின்றேன்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு பிராந்தியத்தில், அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள பொத்துவில் எனும் ஒரு சாதாரண கிராமத்தில் பிறந்த ஒரு சாமன்ய மனிதனுக்கு இது சாதனை அல்லாமல் வேறென்ன..? - என்று அஸ்மின் குறிப்பிட்டார்.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

## கிழக்கின் சுற்றுலா மையம் பயிற்சித் திட்டம் ஆரம்பம்





(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சிந்தனையில் கிழக்கிலங்கையில் வசிக்கின்ற சுற்றுலாத்துறையில் ஆர்வமிக்க இளைஞர் யுவதிகளுக்கு 'கிழக்கின் சுற்றுலா மையம்' இப்பயிற்சி திட்டமானது மட்டக்களப்புஅபெக்ஸ்கம்பஸ்மொழி மற்றும் தொழில் பயிற்சி மையம் ஏற்பாட்டில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஜனாதிபதி யின் செயற்குழு தலைவரும் 'கிழக்கின் சுற்றுலா மையம்' இந்த கருப்பொருளை ஜனாதிபதி மட்டத்திற்கு எடுத்துச்சென்ற வரும் சமூக ஆர்வலருமான மோகன் கணபதிப்பிள்ளை பங்குபற்றி இருந்தார்.

நிகழ்ச்சித்திட்டத்தில் 150 இற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் பங்குபற்றிஇருந்ததுடன்அவர்களுக்கான விரிவுரைகள் அனுபவமும் தேர்ச்சியும் மிக்க விரிவுரையாளர்களை கொண்டு நடத்தப்பட்டது.

கிழக்கின் சுற்றுலா மையம் செயற்றிட்டமானது மொழி மற்றும் தொழில் பயிற்சி மையத்தில் இலவசமாக செயல்படுத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சி திட்டமானது கிழக்கிலங்கையின் சுற்றுலா துறை முன்னேற்றம் மற்றும் அந்நிய செலாவனியை அதிகரிக்க வழிவகுப்பதோடு அவர்களின் தொழில் மற்றும் வருமானத்தை அதிகரிக்க செய்வதையும் தொழில் அங்கத்துவத்தை வழங்குவதையும் பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

இப்பயிற்சி நெறி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படுவதுடன் கிழக்கின் சுற்றுலா மையம் சுற்றுலா வழிகாட்டிக்கானஉத்தியோகபூர்வஅடையாள அட்டை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

## போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பவர்கள் யார்?



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை மற்றும் சம்மாந்துறை பிரதேச சபை பகுதிகளில் போக்குவரத்துக்கு இடையூறாக வீதியோரங்களில் திரியும் கட்டாக்காலி மாடுகளால் பல்வேறு சிரமங்களை பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

கல்முனை மாநகர சபை மற்றும் சம்மாந்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் சுற்றித்திரியும் இவ்வாறான கட்டாக்காலி மாடுகளால் அடிக்கடி விபத்துக்கள் மற்றும் பொது மக்களின் நாளாந்த செயற்பாடுகளுக்கு சிரமம் ஏற்பட்டு வருகின்றது.



மேலும் கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளருக்கு பலதடவைகள் உரிய தரப்பினரால் அத்தியாவசிய சேவைகளானபிரதேசசெயலங்கள் வைத்தியசாலைகள் வங்கிகள் பொதுப் போக்குவரத்து பகுதிகளில் இரவு வேளைகளில் கட்டாக்காலி மாடுகள் சர்வ சாதாரணமாக திரிகின்றன. வீதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் குறைந்துள்ளமையால்கட்டாக்காலி மாடுகள்ஆடுகள்பிரதானவீதிகளை ஆக்கிரமித்து சுதந்திரமாகத் திரிகின்றன.

எனவே, கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லை அதிகரித்திருப்பதால் அவற்றைக் கைப்பற்றி உரிமையாளர்களிடமிருந்து தண்டப்பணம்அறவிடநடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கொரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இப்பகுதியில் மழை பெய்து வரும் நிலையில் பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகள் ஆடுகளின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகின்றது.இதனால் இவ்வீதியில் பயணம் செய்யும் வாகனங்கள் விபத்திற்கு உள்ளாகி வருகின்றன.

இக்கட்டாக்காலிகள் பிரதான வீதிகள் பொதுச் சந்தைகள் விளையாட்டுமைதானங்கள் பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் பொது மக்களுக்கு பெரும் தொல்லையாக இருப்பதுடன் விபத்துகளும் நிகழ்கின்றன.

அத்துடன் இரவு நேரங்களில் பெரும் எண்ணிக் கையிலான கட்டாக்காலி மாடுகள் கூட்டம் கூட்டமாக நகரை ஆக்கிரமித்து அசுத்தப்படுத்தி வருவதும் துர்வாடை வீசுவதும் வர்த்தகர்களுக்கு பெரும் அசௌகரியங்களைஏற்படுத்துகின்றது.

இவற்றைக் கருத்தில் கொண்டு கட்டாக்காலிமாடுகளைகட்டுப்படுத்தும் பொருட்டு அவற்றைக் கைப்பற்றி உரிமையாளர்களிடம் உரிய தரப்பினர் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை எனவும் இதனை கட்டுப்படுத்த உரிய தரப்பினர்பொலிஸாருடன்இணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## இனப்பிரச்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில்நேற்றுநடைபெற்றது. இதன்போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிந்து 15 வருட காலம் முடிவடைந்தநிலையில்எந்தவொரு அரசாங்கமும் தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வினை முன்வைக்கஇல்லை. ஆர்வத்துடன் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவும் இல்லை.

போருக்குப் பிறகு பல ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு எமது மக்கள், நாங்கள் வாக்களித்திருக்கின்றோம்... அதில் சிலர் வென்றிருக்கின்றார்கள். ஒரு சிலர் தோற்றிருக்கின்றார்கள். வென்றவர்களோ தோற்றவர்களோ தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் அடிப்படைச் சிந்தனைகளுடன் இருந்தது இல்லை.

போருக்குப்பிறகுமிகப்பெரியஅளவில்சிங்களபௌத்தமேலாதிக்கத்தை வடக்கு, கிழக்கில் நிறுவுகின்ற வேலைத்திட்டத்தை இன்றும் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவை தொடர்பில் ஜனாதிபதியுடன் ஆளும்தரப்புடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடியிருந்தாலும் ஆக்கபூர்வமானநடவடிக்கைஎதுவும் எடுக்கப்படவில்லை. தமிழ் மக்கள் அவர்களை நம்பி வாக்களித்தாலும் ஆளும்தரப்பு இதற்கான முடிவைக் காணவில்லை என்பதை நாங்கள் எல்லோரும் சிந்திக்கவேண்டும்.

போருக்குப் பிறகு அரசியல் கட்சியாக பல குழுக்களாக அமைப்புக்களாக பிரிந்து நின்றது அவர்களுக்குநல்லஆரோக்கியமான இடத்தைஏற்படுத்திக்கொடுத்துள்ளது. இவை மாற்றப்படவேண்டும். இந்த மண்ணில்தமிழ்மக்கள்சமத்துவமாக கலை கலாசாரங்களுடன் சுதந்திரமாக எம்மை நாங்கள் ஆளுகின்ற உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தகுதி வாய்ந்தவர்கள் இவை நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை மாத்திரம்தான் வேறு எதுவும் இல்லை என்ற விம்பம் சர்வதேச ரீதியாக உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு அதுவல்ல. தேசிய இனப்பிரச்சினைஒன்றுஇருக்கின்றது அது தீர்க்கப்படவேண்டும்.

இந்தப் பிரச்சினையை வெளியுலகத்திற்கு கொண்டு செல்ல, சிங்கள தரப்பிற்கு அதைத் தெளிவுபடுத்துவதற்கு நாங்கள் எடுத்துக்கொண்ட ஜனநாயகபூர்வமானவழியேதமிழ் பொது வேட்பாளர். வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய மக்கள் இதற்கு ஆதரவாக வாக்களிக்கின்றபோது இந்தப்பிரச்சினைதீர்க்கப்படவில்லை என்பதை வெளியுலகமும் இராஜதந்திர சமூகமும் எல்லோருக்கும் மீண்டும் ஒரு முறை உணத்தும்.

வடக்கு கிழக்கில் மட்டுமல்ல உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் இதனை ஆர்வத்துடன் வரவேற்றிருக்கின்றார்கள். அரச ஆதரவுடன் இருக்கும் ஒரு சிலர் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கலாம். எவ்வாறு இருப்பினும் வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் மக்கள் பல லட்சமாக வாக்களிக்கின்றபோது நாங்கள் எதிர்நோக்கியிருக்கும் பல பிரச்சினைகளைவெளிக்காட்டுகின்ற, அதேவேளை தமிழ்த்தேசிய இனப்பிரச்சினையை தீர்க்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக சுட்டிக்காட்டுவதற்கு இதனைப் பயன்படுத்தவேண்டும்.

நாங்கள் பொது வேட்பாளரை நிறுத்தப்போகின்றோம் என்பதற்குப் பிறகுஜனாதிபதிவேட்பாளர்கள்இங்கு வருகின்றார்கள். இவர்களுக்குஎமது மக்களின் வாக்குப் பலம் புரிகின்றது. அதனால்தான் வாக்குகளை பெற்றுக் கொள்பவதற்காக தேடி வருகின்றார்கள்.

இந்தியா உட்பட பல நாடுகளும் ஐ.நா பொதுச்சபை செயலாளர் கூட இல்லைகைவந்திருந்தபோதுகூடஎமது பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் எனபேசி இருந்தார்கள் இன்று அதிலிருந்து வெளியேறி இலங்கை அரசாங்கம் வேறெரு தடத்தில் பயணம் செய்ய முயற்சிக்கின்றது.

இதனை தடுத்து நிறுத்தி தமிழ்த் தேசியப் பிரச்சினை தீரரக்கப்படவேண்டும் இதற்கு தமிழ மக்கள் அணிதிரண்டு பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கவேண்டும் தமிழ் மக்கள் மட்டும் பாதிக்கப்பட வில்லை தமிழ் பேசும்முஸ்லிம்மக்களும்மலையக மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களும் இதனைப் புரிந்து கொள்வார்கள் என நம்கின்றோம்.

எனவே தமிழ் பொதுவேட்பாளருக்குமுழுமையானஆதரவை வெளிப்படுத்தவேண்டும் என்றார்.

இதேவேளை தமிழ் பொது வேட்பாளர் சுயேட்சையாகவே போட்டியிடுகின்றார்வெகுவிரைவில் கட்டுப்பணம்செலுத்தப்பட்டுபிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பவித்திராவும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் இந்த தீர்மானத்தை எடுத்திருக்கின்றேன். 2022 ஆம் ஆண்டு எமது நாடு பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஸ்திரமற்ற நிலையில் பாரிய நெருக்கடிகளை எதிர் கொண்டிருந்தமையை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.

அந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலானோரின் ஆதரவுடன் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

அன்று எடுக்கப்பட்ட அந்த தீர்மானத்தால்நாம்நம்பியதுபோல ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி இருக்கின்றார். எனவே ஜனாதிபதி தேர்தலிலும் ரணில் விக்ரமசிங்கவுக்குஆதரவளிக்குமாறு இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஆதரவாளர்கள் என்னிடம் கேட்டுக்கொண்டனர்.

தீர்க்கமானமுடிவுகளைஎடுக்கும் போதுஇரத்தினபுரிமாவட்டம்மற்றும் ஆலோசனைகளை பெறுவது எனது கொள்கையாகும் . அந்த வகையில் தொடர்ந்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினராக இருந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதாக அறிவிக்கின்றேன் என்றுள்ளது.

## தவறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்அரசுக்கட்சிநாடாளுமன்ற உறுப்பினர் சார்ளஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் வைத்தியசாலையில் இடம்பெற்ற மரியராஜ் சிந்துஜாவின் உயிரிழப்பு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்த இறப்புக் குறித்து துரித விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்தனதுஉரையின்போது வலியுறுத்தியிருந்தார். நாடாளுமன்றத்தில்நேற்று இடம்பெற்ற மருத்துவ திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

பதிலளித்த சுகாதாரத்துறை அமைச்சர், இந்த விடயம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான விசாரணைஅறிக்கையைஇதுவரை ஆராயவில்லை. குறித்த விடயத்தில் ஏதாவதுதவறுகள்நடந்திருந்தால்அது தொடர்பில் நிச்சயமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை நாட்டில் நோயாளர்களை பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காகவே புதியசட்ட மூலமொன்றையும் முன்வைத்துள்ளோம் என்றார்.

## 24 மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இதுதொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2024.07.31 ஆம் திகதி தொடக்கம் 2024.08.08ஆம் திகதி வரையிலும் கிடைக்கப்பெற்றுள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை157என்றும்ஆணைக்குழு மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

## பன்றி, நாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நேற்றுவரையில் 22 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 11 வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 1 வேட்பாளரும், சுயேட்சையாக போட்டியிட 10 வேட்பாளர்களும் இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்காக கட்டுப்பணம் ஒகஸ்ட் 14 வரை ஏற்கப்படும். ஒகஸ்ட் 15 காலை 9 மணி முதல் 11.30 மணிவரையான காலப்பகுதியில் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் காலவகாசம் இன்றுடன் முடிவடைகிறது.

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு ஓசல ஹேரத்தும், இலங்கைதொழிலாளர் கட்சிசார்பில் ஏ.எஸ்.பி.லியகேவும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாசவும், தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பில் எஸ்.கே.பண்டாரநாயக்கவும், தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷவும், ஐக்கிய சோஷலிச கட்சி சார்பில் சிறிதுங்க ஜயசூரியவும், புதிய சீஹல உருமய கட்சி சார்பில் சரத் மனமேந்திரவும், ஜனசேனா முன்னணி சார்பில் பத்தரமுல்லே சீலரத்ன தேரரும், அருனலு மக்கள் முன்னணியின் சார்பில் கே.ஆர்.கிறிஷானும், தேசிய மக்கள் சக்தி சார்பில் அனுரகுமார திஸாநாயக்கவும், சோசலிசசமத்துவ கட்சிசார்பில் பானி விஜேசிறிவர்தன ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அதேவேளைஅங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி என்ற பிரிவில் றுஹுணு மக்கள் முன்னணி சார்பில் அஜந்த த சொய்சா கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

சுயேட்சையாக போட்டியிடும் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்தி ரத்ன, கே.கே.பியதாஸ, ஆனந்த குலரத்ன, அக்மீமன தயாரத்னதேரர், சிறிபாலஅமரசிங்க, சரத் பொன்சேகா, அன்டனி விக்டர் பெரேரா, ஐதுருஸ் முஹம்மது இல்யாஸ், மானகே பேமசிறி ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

## எமில் ரஞ்சனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில்சட்டமாஅதிபரினால் குறித்த குற்றச்சாட்டுகள் முன்கொண்டு செல்லப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, நியோமால் ரங்கஜீவ மற்றும் எமில் ரஞ்சன் லமாஹேவா ஆகிய பிரதிவாதிகளுக்கு எதிராக 33 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு விசாரணை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவந்தநிலையில் 2022 ஜனவரி 12ஆம் திகதி முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவாவிற்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பு அறிவிக்கப்பட்டிருந்தது.



காலைக்கதிர்
Kalaikkathir




# நல்லூர்ப்பெருங்கோயிலில் கொடியேற்றப் பெருவிழா

நல்லூர்க் கந்தசுவாமி பெருங்கோயிலில் ஆகமவழிநின்று மஹோத்ஸவம் நிகழ்கிறது.

பிரம்மோத்ஸவம் அல்லது மஹோத்ஸவம் என்று அழைக்கப்பெறும் ஆண்டுப் பெருவிழாவில் முதல் நாள் நிகழ்வாக கொடியேற்றம் என்ற துவஜாரோஹணம் நடைபெறுகிறது.

இதற்கான ஆரம்ப நிகழ்ச்சிகள் முன்னதாகவே ஆரம்பமாகி நிகழத் தொடங்கி விடுகின்றன. நல்லூர் ஆலய சம்பிரதாயப் பிரகாரம் இறைவனிடம் அனுக்ஞை பெற்று பெருவிழாவை ஆரம்பிக்கும் முகமாகப் பிரார்த்தித்துக் கொள்வர்.

முதல்நாள் ஆலயம் அமைந்திருக்கும் கிராமத்தில் வசிக்கும் அசுரர்- பைசாசர்கள் போன்றோரால் பெருவிழாவிற்கு எந்த இடையூறும் உண்டாகாமல் இருக்க 'கிராமசாந்தி' என்ற கிரியை செய்யப்பெறும்.

அடுத்து ஆலயம் அமைந்துள்ள இடத்தில் உள்ள குற்றங்கள் நீங்கும் பொருட்டு 'வாஸ்து சாந்தி' செய்யப்பெறும்.

நல்லூர் மரபுப்படி க்ஷேத்ர பாலரான பைரவர் காவல் செய்யும் முகமாக உலாக் கண்டருள்வார். அப்பொழுது கோபுரங்கள், மதில்கள் எங்கணும் சேவற் கொடிகள் ஏற்றப்படும்.

தொடர்ந்து பூங்காவில் மிருத்சங்கிரகணம் என்ற கிரியை இடம்பெறும். ஏழு கும்பங்கள் வைத்து அவற்றில் சுத்த- லவண- இக்ஷு- ஸுரா- சர்ப்பி- ததி- க்ஷீர (பால்) என்ற ஏழு கடல்களையும் ஆவாகிப்பர். பிரம்ம மண்டலம் முதலாக அக்கினி மண்டலம் ஈறாக ஒன்பது மண்டலங்களையும் வரைவர். இவற்றுடன் மண்வெட்டியையும் வைத்துப் பூஜை செய்த பின் பூசூக்தம் (யஜுற் றீற்வமிழிது) பாராயணம் செய்து பிரதான ஆச்சாரியார் மண்டியிட்ட வண்ணம் மண்ணை சேர்த்து யாகசாலையில் கொண்டு சென்று வைப்பார்.

இதனைத் தொடர்ந்து மஹோற்சவ யாகசாலையின் வாயு திக்கில் 16 பதங்கள் வரைந்து நடுவிலுள்ள 4 பதங்களில் சந்திர கும்பத்தை ஸ்தாபித்துப் பூஜை செய்வர். எஞ்சியுள்ள 12 பதங்களிலும் வைகர்த்தன் -விவஸ்தன்- மார்த்தாண்டன்- பாஸ்கரன்-ரவி-லோகப்பிரகாசன்-லோகசாட்சி-திரிவிக்கிரமன்- ஆதித்தன்- சூரியன்- அம்சுமாலி- திவாகரன் என்ற 12 சூரியரையும் ஆவாஹித்துப் பிரார்த்திப்பர்.

பசுப்பாலில் நெல்- எள்ளு- உளுந்து- பயறு- கொள்ளு- அவரை- கரும் பயறு- வெண்கடுகு- துவரை என்ற நவதானியங்களையும் இட்டு திக்பாலகர்களை பிரார்த்தித்து 'ஓஷதி சூக்தம்' ஓதி பிரதான ஆச்சார்யர் இடுவார்.

கொடியேற்ற நாளன்று புண்ணியாகவாசனம் முதலியன நிகழ்ந்த பின் 'துவஜாங்குரம்' இடப்படும்.

துவஜஸ்தம்பத்தின் (கொடிமரம்) அடியில் அஷ்டதளபத்மம் வரைந்த பிரம்மாவைப் பூசித்து இந்த அங்குரார்ப்பணத்தை ஆற்றுவர்.

தொடர்ந்து சிவாச்சார்யர் தன்னை 'பூதசுத்தி- அந்தர்யாகம்' என்ற ஆத்மார்த்தக் கிரியைகளால் தயார்ப் படுத்திக் கொண்டு ரட்சாபந்தனம் என்ற கங்கணம் கட்டிக் கொள்வார். ஒரு தாம்பாளத்தில் அரிசியை நிரவி அதில் தேங்காய் வைத்து அதன் மேல் மஞ்சள் பூசிய பவித்ரமுடிச்சிட்ட பருத்தி நூல்களை வைத்து அஷ்ட நாகங்களையும் வழிபட்டு தமக்கு இரட்சாபந்தனம் செய்த பின் இறை மூர்த்தங்களுக்கும் இரட்சாபந்தனம் சாற்றி விடுவார்.

இவற்றினை அடுத்து கொடியேற்றும் துணியில் வரையப்பெற்றுள்ள சித்ரமயூரப் படத்திற்கு இறை உருவேற்றும் முகமாக 'படபிரதிஷ்டை' செய்யப்பெறும்.

இது போலவே தம்பப் பிரதிஷ்டையும் அஸ்திரப் பிரதிஷ்டையும் பலிபீடப் பிரதிஷ்டையும் ஆற்றும் வழக்கம் இருக்கிறது.

### கொடிப்படம்

கொடித்தம்பத்தின் நீளத்தைப் போல இருமடங்கு நீளமாக கொடிச்சீலை அமையும். இக்கொடிச் சீலையை மூன்று பாகமாகப் பிரித்து அதில் முதற் பாகத்தை மேலும் மூன்று பாகமாக்கி நடுப்பாகத்தில் சற்சதுரம் வரையப்படும்.

அதில் கந்த சுவாமிக்குரிய வாகனமான மயிலும் அஸ்திரமான வேலும் வரைவதுடன் அதனைச் சுற்றி குடை- கொடி- இரட்டைச்சாமரை- வலப்புறம் சூரியன்- இடப்புறம் சந்திரன் -பத்மம்- சக்ரம் -சங்கு- மத்தளம் -தீபம் -தூபம்- ஸ்ரீவத்ஸம் - சுவஸ்திகம்- கும்பம் ஆகிய மங்கலப் பொருட்களும் வரையப்படும். கொடிச்சீலையின் மேற்பாகத்தில் பிரம்ம முடிச்சு இடம்பெறும்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மரபுப்படி கொடிப்படம் மரபு வழியில் வரையப்பட்டு சிறிய ரதத்தில் கிராம பிரதட்சணமாக கொண்டு வரப்பெற்று கொடியேற்ற விழாவின் முதல் நாள் கோயிலைச்சேரும்.

சைவசித்தாந்த மரபுப்படி,
கொடிமரம்- பதியாகிய இறைவன்
கொடிச்சீலை- பசுவாகிய ஆன்மா
கொடிமரத்தில் சுற்றப்பெறும் தர்ப்பைக்கயிறு- பாசம் என்ற மலங்கள் கொடிச்சீலை ஏற்றப் பயன்பெறும் கயிறு- திருவருட்சக்தி

என்று கருதப்படுகிறது. ஆக இறைவனுடன் பாசமும் பற்றும் அறுத்து ஆன்மா கலப்பதையே கொடியேற்ற உற்சவம் வெளிப்படுத்தும்.

கொடியேற்று முன் கொடிப்படத்தில் வரையப்பெற்ற உருவங்களுக்கு கண் திறக்கப்பட்டு (நயனோன்மீலனம்) கங்கணம் சாற்றப்படும். பூர்வ சந்தானம் மற்றும் பச்சிம சந்தானம் ஆகிய கிரியைகள் செய்யப்பட்டு 'ஸ்பரிசாகுதி' நிகழும். இதன் மூலம் கொடிச்சீலையில் இறை சாந்நித்யம் ஏற்படச் செய்து தொடர்ந்து நடக்கிற பிரம்மோத்ஸவத்தில் அதனை வழிபடு பொருளாக மாற்றி இறையருட் செல்வமாக்குவர்.

குண்டத்தில் பூஜிக்கப் பெற்று ஆஹூதிகள் வழங்கப்பட்ட அக்கினியில் ஆதாரசக்தியையும் சுவாமியின் மயூர வாகனத்தையும் ஆத்ம- வித்தியா- சிவ தத்துவங்களையும் பூஜித்து மும்மூர்த்திகளையும் தத்துவேஸ்வரர்களையும் மூர்த்தி மூர்த்தீஸ்வரர்களையும் பூஜித்து தனித்தனியே மும்முறை ஆஹூதி செய்வர். தோடர்ந்து மூலமந்திர ஹோமம்- சம்வாத ஹோமம் இடம்பெறும்.

குண்ட சமீபத்தில் வைக்கப்பட்டுள்ள சாந்தி கும்பத்தில் அஸ்திர மந்திர ஜபம் இடம்பெறும். சிருக்-சிருவங்கள் என்ற நெய் விடும் பெரிய இரு கரண்டிகளையும் கைகளில் ஏந்தி நெய் நிரப்பி 'சுவா' என்று அக்கினியில் சிறிது ஆஹூதி செய்து அவற்றைக் கையிலேந்தி சாந்தி கும்பத்தையும் பரிசாரகரின் உதவியுடன் எடுத்துக் கொண்டு நாடி நூல் வழியே கொடிப்படத்தை அடைந்து படத்தில் ஒவ்வொரு பாகத்திற்கும் முறையே 'ஹா' என்ற ஓசையுடன் நெய் விடுவர். இதுவே ஸ்பரிசாகுதி என்பர்.

### முழக்குக மங்கல முரசே

அடுத்து 'பேரி தாடனம்' என்ற கிரியை செய்யப்பெறும். இது உத்ஸவாசார்யார் முறைப்படி பேரிகை என்ற மேளத்தை பூசித்து மந்திரத்துடன் ஒலித்து இறைவனுக்கு செய்யப்பெறும் உற்சவத்தில் அனைத்து தேவர்களையும் எழுந்தருளச் செய்ய வேண்டும் சடங்காகும். ஈழத்திலும் தமிழகத்திலும் சிவாலயங்களில் பின்பற்றப்படும் பத்ததிகளின் படி,

1. 'பிரம்மஜஜ்ஞானம்' வேதத்தால் பிரம்மதியானம் செய்து ஒரு முறையும்

2. 'இதம் விஷ்ணு' வேதத்தால் விஷ்ணுவை தியானித்து இரு முறையும்

3. 'த்ரயம்பகம்' வேதத்தால் ருத்ரனைத் தியானித்து மும்முறையும்

4. 'வியோமசிதி' வேதத்தால் ஒரு முறையும்

5. 'சகல புவன பூதிம்' என்ற மந்திரத்தால் இரு முறையும்

6. 'பிரம்மேந்திர நாராயண'' என்ற மந்திரத்தால் மும்முறையும்

பிரதான குருக்கள் மேளம் அடித்து பின் வாத்திய காரரிடம் கொடுத்து 'கணபதி தாளம்' வாசிக்கச் செய்வார். இதுவே 'பேரீதாடனம்' என்பதாம். சங்ககாலத்திலேயே விழா ஆரம்பமாக இருப்பதை வள்ளுவன் முரசறைந்து அறிவித்ததாய் செய்திகளுள்ளமையும் இங்கு சிந்திக்கத்தக்கது.

### அருட்கொடி கட்டினனே

தில்லை வாழந்தணருள் ஒருவரான உமாபதி சிவம் ஜாதி பேதமில்லாமல் தனது குருவாக மறைஞானசம்பந்தரைக் கொண்டதால் அவரை மற்றைய சிதம்பரத்து பிராமணர்கள் தள்ளி வைத்தனர். அவரது பூஜைப்பொறுப்பும் பறிக்கப்பட்டது. இந்நிலையில் சிதம்பரத்தில் உமாபதிசிவம் இல்லாமல் கொடியேற்றிய போது அக்கொடி ஏறாமல் நின்று விட்டது. அசரீரி அறிவுறுத்த உமாபதி சிவம் வரவழைக்கப்பட்டார். கொடிக்கவி பாடினார். கொடி எத்தடங்கலும் இன்றி பட்டொளி விசிப்பறந்தது.

'வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை- நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கும் அருள் நல்கக் கொடி'

இதனூடாக கொடியேற்றுதல் சாதாரண காரியமன்று என்பதும் இறையருட் துணையுடன் செய்யப்பெற வேண்டிய காரியம் என்றும் புலப்படும். கொடிப்படம் நமக்கு அஞ்சேல் என்று அபயம் காட்டும் இறைவனைக் குறிக்கிறது. பதாகை முத்திரை வடிவமாய் இறைவன் தனது வலது கரத்தை விரித்துக் காட்டினாற் போல இது அமைந்துள்ளது.

### சமஸ்த தேவதா ஆவாஹனம்

கொடிப்பட பிரதிஷ்டையின் பின் கொடிப்படத்தை ஊர்வலமாகக் கொண்டு வந்து உற்சவ மூர்த்தியையும் அலங்கரித்து துவஜஸ்தம்பத்தின் அருகே எழுந்தருளச் செய்து புண்ணியாக வாசனம் செய்வர்.

நல்லூர் மரபில் விநாயகர், வள்ளி தேவசேனா தேவியர், முருகவடிவமான வேற்பெருமான் த்வஜஸ்தம்ப மண்டபத்திற்கு எழுந்தருள்வர்.

முருகன் செவ்வரளி மாலை சாற்றிக்கொள்பவன். செவ்வண்ணன். செந்நிறம் அவனுக்குரியது. அவன் போர்க்கடவுள். வீரத்தின் விளைநிலம். எனவே அவனது கொடியேற்ற விழாவின் செந்நிற அலங்காரத்தோடு விழா ஆரம்பிப்பது நல்லூர் மரபு. இது முருகன் அல்லது தேவிக்குப் பொருந்தும் தனி மரபு ஆகும்.

ஸ்தம்பத்திற்கு நியாசபூர்வமாக ஆராதனை செய்த பின் சமஸ்த தேவதா ஆவாஹனம் என்பதனைச் செய்வர். இது அகில தேவர்களையும் கொடித்தம்பத்தில் அருள்முகமாக எழுந்தருள வேண்டுவதாகும்.

' ஸ்ரீமத் சுராசுர முனிவர சித்த வித்தியாதர யட்ச ராட்சச கருட காந்தர்வ கின்னர கிம்புருஷ பூத பிரேத பிசாச சித்த யோகினி சாகினி டாகினி பிரம்மராட்சச விநாயக பூதனா ரேவதி ஸ்கந்த புரோசன நட்சத்திர நர மிருக பசு பட்சி ஸ்தாவர சங்கமங்களும்.' என்று இது நீண்டு செல்லும்.

இவ்வழியே மேல் ஏழு லோகங்கள்- கீழ் ஏழு லோகங்கள்- ஏழு அண்டங்கள்- அஷ்ட மஹா நாகங்கள்-மலைகள்- சப்த சமுத்திரங்கள்- அகில நதிகள்-ரிஷி கணப்பிரமுகர்கள்- சதுர் வேதங்கள்- தர்மசாஸ்திர சைவாகம உபநிஷதசித்தாந்த சாஸ்திர பஞ்சப்பிரம்ம ஷடங்க மந்திரங்கள் ஆதிய மந்திர தேவதைகளும்- ஒன்பது கோள்கள்- பத்துத் திசா தேவர்கள்- அஷ்ட வசுக்கள்- ஏகாதச ருத்ரர்- பன்னிரு சூரியர்கள்-என்ற திரியத்திரிம்சத் கோடி (முப்பத்து முக்கோடி) தேவர்கள் கூட்டங்களும்

பதினைந்து பறவை மந்திரங்கள்- பதினாறு ஸ்வர மந்திரங்கள்- மஹா மந்திரங்கள்- உப மந்திரங்கள்- ஹூங்கார- பட்கார- ஸ்வாதாகார- ஸ்வாஹாகார- வஷட்கார- வௌஷட்கார என்பனவாய மனுக்கள்- மனவியல்புகள்- முக்குணங்கள்- அந்தக்கரணங்கள்- புறக்கரணங்கள்-ஐம்பொறிகள்- தச வாயுக்கள்- பத்து நாடிகள்- ஆறாதாரங்கள் போன்ற யாவற்றினதும் பெயர்களையும் அவற்றின் முக்கிய தொழிற்பாடுகளையும் சம்ஸ்க்ருதத்தில் சொல்லி

மேருவுக்கு தட்சண திக்கில் உள்ள இன்ன நாட்டில் இன்ன கிராமத்தில் ஸ்ரீமத் பரப்பிரம்மமான (வல்லி தேவசேனா ஸமேத ஸுப்ரம்மண்ய பரமேஸ்வரருக்கு) இத்தனை நாட்கள் நடைபெறவுள்ள மஹோத்ஸவத்தில் மங்கல சேவையின் பொருட்டு (ஸுப்ரம்மண்ய பரமேஸ்வரருடைய) ஆக்ஞையின் படி எல்லாத் தேவர்களும் இந்த கொடித்தம்பத்தில் குறித்த மஹோத்ஸவ காலத்தில் தத்தம் அங்கம்- ஆயுதம்- பத்னி- புத்திர- பரிவாரங்களோடு எழுந்தருளியிருக்க வேண்டும் என்று உத்ஸவாச்சாரியார் பிரார்த்திப்பார்.

### பொங்கும் மங்கலம் எங்கும் தங்கிட கொடி

சமஸ்த தேவதா ஆவாஹனம் நிகழ்ந்த பின்னர் தசதானம்- நவக்கிரகப்பிரீதி- என்பவற்றைச் செய்து மூலதேவதா அனுக்கிரஹத்துடன் பகவானின் சேனாதிபதியைப் பிரார்த்தித்து ஸர்வ வாத்திய கோஷத்துடனும் மயூர காயத்திரி ஜபத்துடனும் மயூரக் கொடியேற்றுவர்.

இது பற்றி முருகனுக்குகந்த குமாரதந்திரத்தின் ஸ்கந்தோற்ஸவ விதிப்படலம் 146 இவ்வாறு கூறும்.

ஆதௌக்ஷ ஸ்ப்ருஷ்ட்வா ஸ்வயம் சான்யம் ப்ரேரயேத் ரோஹணாய வை டு

பூர்வேந்துக்ஷ பஸ்ஞசிமாசாஸ த்-வ்ஜாக்க்ஷர கக்ஷமநம் ஸுனுபம் டுடு

ஆச்சாரியார் முதலில் தாம் தொட்டு ஏற்றிய பின் பிறரைக்கொண்டு சரியாக நிலை நிறுத்த வேண்டும். கிழக்கு- வடக்கு- மேற்கு திசைகளில் கொடியின் நுனி சென்றால் சுபம் என்கிறது.

### மேலும் இதே படலத்தின் 154வது சுலோகம்

'எந்த நாட்டில் கொடிமரம் இருக்கிறதோ அங்கு அரசு விருத்தியாகும்' (யத்ராஸ்தேத்வ்ஜயஷ்டிஸ்துதத்க்ஷயாஸ்ஞரம் வ்ருத்க்ஷதி மாப்னுயாத்) என்கிறது.

இதே போலவே 155வது மற்றும் 156வது சுலோகங்களும் துவஜஸ்தம்பத்திற்கு அருகில் சென்றாலேயே மஹாபாவங்கள் கூட இல்லாதொழியும் என்கிறது. இவ்வாறே பிற சைவ வைஷ்ணவ ஆகமங்களும் கொடியேற்றத்தையும் கொடிமரத்தையும் சிறப்பித்துக் கூறுகின்றன.

எனவே கொடி மரம் உத்ஸவத்திற்கு மட்டுமே உரியது என்றல்ல. எப்போதும் வழிபாட்டுக்கும் சிறப்புடையது ஆகும். இந்த வகையில் நல்லூரில் ஷண்முகர் முன்றலிலும் ஒரு கொடிமரம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதும் கவனித்தற்குரியது.

கொடியேறிய உடன் ஸ்தம்பத்தில் ஆவாஹிக்கப்பெறும் மூர்த்தியை விசேஷ நியாசங்களால் பூஜித்து பல்வேறு திரவியங்களால் அபிஷேகித்து அலங்காரம் செய்து தீபாராதனை- ஸ்தோத்திரம் செய்து லாஜபுஷ்பாஞ்சலியும் செய்வர்.

கணபதி தாளம் முதலிய தாளங்களும் கீதங்களும்




# நல்லூர்ப்பெருங்கோயிலில் கொடியேற்றப் பெருவிழா

முன் பக்க தொடர்ச்சி..............

ஸுர ஸுர கக்ஷணபதி ஸுந்தக்ஷர கேஸஞும் ரிஷி ரிஷி கக்ஷணபதி யக்ஞ ஸமானம்

பவ பவ கக்ஷணபதி பத்க்ஷம ஸஞரீரம் ஜய ஜய கக்ஷணபதி திக்ஷவ்ய நமஸ்தே

என்று ஆரம்பித்து பிரபல கணபதி தாளம் பாடப்பெறும். இதன் பொருளை தமிழிலும் அழகான கவிதையாக,

'தேவாதி தேவ கணபதியே அழகிய திருமுடி கொண்டவரே
திறமிகு ரிஷிகள் கணபதியே யாகத்தலைவனை ஒத்தவரே
பிறவியழிக்கும் கணபதியே பத்ம சரீரமுடையவரே
வெல்க வெல்க கணபதியே வேண்டி உம்மை வணங்குகிறேன்'

என்று சொல்லலாம்.

அடுத்து புஜங்காஞ்சித நிருத்தம் ஆடப்பெறும். உஜ்ஜனை ராகம் ஆலாபனை செய்யப்பெறும். தமிழ் வல்ல ஓதுவார் மூர்த்திகளைக் கொண்டு தக்கராகத்தில் அமைந்த பாசுரம் பாடவேண்டும். 'கக்ஷணானாம் த்வா..' என்ற வேதம் ஓதப்பெற்று மஹாகணபதி ஆவாஹிக்கப் பெறுவார்.

அடுத்து அந்தந்த மூலமூர்த்திக்குரிய வாகனத்தின் தாளம் இசைக்கப்பெறும். நல்லூரில் மயூரதாளம் இசைக்கப்பெறும்.

பண்- இந்தளம்
ராகம்- சாரங்கா
நிருத்தம்- மயூர நிருத்தம்
வேதம்- 'நவோ நவோ பவதி' என்று தொடங்கும் வேதம்.

இவற்றினை அடுத்து மஹா ஆசீர்வாதம் இடம்பெறும்.

### சந்தியாவாஹனம்

தொடர்ந்து அஸ்திர- பலிபீட பிரதிஷ்டை நிகழ்ந்த பின் சுவாமி சர்வ வாத்திய கோஷத்துடன் மாடவீதிக்கு எழுந்தருள்வார்.

சுவாமியுடன் அஸ்திர தேவரும் பலிபீடமும் தனித்தமைந்த பல்லக்கில் அல்லது ஊர்தியில் கொண்டு செல்லப்படும்.

ஆலய கோபுர வாசலில் 'ஸமுகா' சொல்லி கட்டியம் கூறப்படும். இதற்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் கோபுரவாயிலுக்கு எதிரே 'கட்டிய மண்டபம்' என்ற ஒரு பிரத்யேக மண்டபம் ஸ்தாபிக்கப்பெற்றிருப்பதும் அவதானிக்கத் தக்கது.

இவ்வீதியின் ஒன்பது திசைகளிலும் சந்தியாவாஹனம் செய்யப்படும். இதனால் இதை 'நவசந்தி ஆவாஹனம்' என்பது வழக்கு. திசை தோறும் நிற்கும் திசா நாயகர்களை உற்சவத்தின் பொருட்டு சாந்நித்யமாக்குவதே சந்தியாவாஹனம் ஆகும்.

கோபுர வாசலில் பிரம்ம சந்தியாவாஹனம் செய்யப்பெறும். நீளமான ஸ்தோத்திரங்கள் சொல்லப்பட்டு பிரம்மன் ஆவாஹிக்கப்படுவார்.

பங்கஜ ப்ரிய பரம காரண காரணாதிக்ஷ சதுர்முகஞும்
ஸுந்தக்ஷரப்ரிய ஹேய நருத்த ஹிரண்ய கர்ப பிதாமஹும்
பேரி மத்க்ஷதக்ஷள முரஜ ஜல்லரி ஸஞங்கஞகாஹளக த்வநிம்
கீக்ஷத நருத்த நிரந்தரம் இதி ப்க்ஷரஹ்ம தாளமிதி ஸ்ம்ருதம் தத்தத்
கீக்ஷத நருத்த நிரந்தரம் இதி ப்க்ஷரஹ்ம தாளமிதி ஸ்ம்ருதம்'

என்று பிரம்ம தாளம் பாடப்படும். இதை தமிழில்,

'பங்கய மேவு பரம காரண காரண முதல்வா நான்முகனே
இங்கித அழகின் பாவுடன் நிருத்த ஹிரண்யகர்ப்ப பிதாமகனே
அங்கிளர் மத்தள பேரிகை சல்லரி அரிய சங்கொலி எக்காளம்
எங்குமிகப் பொலி கீதம் இசைப்பது ஏத்திடு பிரம்ம தாளம் இதே அதுவே
எங்குமிகப் பொலி கீதம் இசைப்பது ஏத்திடு பிரம்ம தாளம் இதே'

என்று அழகாக மொழி பெயர்க்கலாம்.

இதனைப் போலவே இந்திர- அக்கினி- இயம- நிருதி- வருண-வாயு- குபேர- ஈசான திக்குகளுக்கும் உண்டு. உரிய பலி அளித்து கற்பூர ஆரார்த்தி சமர்ப்பித்து தாம்பூலம் கொடுத்து போற்றுவர்.

பிரம்ம சந்திக்கு,
ராகம்- மத்யமாவதி
தாளம்- பிரம்மதாளம்
நிருத்தம்- கமலவர்த்தனம்
வாத்தியம்- கச்சபுடம்
வேதம்- 'பிரம்மஜஜ்ஞானம்' பண்- மேகராகம் அல்லது நாட்டை

நல்லூர் சிவன் ஆலயத்திலும் சுன்னாகம் கதிரமலைச்சிவன் ஆலயத்திலும் நிருத்தம் இப்போதும் நிகழ்வதும் அவதானிப்பிற்குரியது.

இப்பண்ணில் முக்கியமாக 'புலனைந்தும் ' என்று தொடங்கும் திருவையாறு மீதான மிக இரசனைக்குரிய அழகு கொஞ்சும் திருஞானசம்பந்தரின் தேவாரம் உள்ளது.

இவ்வாறே எல்லாத் திசைத் தேவர்களுக்கும் உரிய பூஜை செய்யப்படும். அவற்றிற்குரிய வகையில் பண்களை மனங்கொண்டு தமிழ் வேதம் பாடுவதும் பாடச் செய்வதும் அவசியம். எனவே அவற்றை மட்டும் முறையே தர விழைகிறேன்.

இந்திர சந்தி- காந்தாரம்
அக்கினி சந்தி- கொல்லி
யமசந்தி- கௌசிகம்
நிருதி சந்தி- நட்டபாடை
வருண சந்தி- சீகாமரம்
வாயு சந்தி- தக்கேசி
குபேர சந்தி- தக்கராகம்
ஈசான சந்தி- சாதாரி (சாலாபாணி என்கிறது பத்ததி)

நிறைவாக உள்ள ஈசான சந்தியில் 'பூதநிருத்தம்' என்பதை சிறப்பாகச் செய்வது ஈழநாட்டு வழக்கு. தவில் வாத்திய காரர் ஒருவர் மேளத்தை வலது தோளில் ஏற்றி அதனை அடித்தவாறே ஒற்றைக்காலில் நின்று ஆடுவதை இந்நிருத்தமாகச் செய்த காட்டுவர். ஈசானத்திற்குரிய தாளம் சம்ஸ்கிருதத்தில் 'ஈஸஞ மஹத்கர..' என்று தொடங்கும்.

இதன் தமிழ் வடிவம்

'உத்தமாசன் ஒண்கரசூலம் உக்கிரவலிமை உடனானோன்
தத்தும் உடுக்கை கும்பக தாளம் தத்திரி கிடதோம் எனவே
நிர்த்தம் பிரமரம் வாத்ய தாளம் டிண்டிமி கொள் பூதநடம்
சத்யோஜாதம் வாமம் அகோரம் தத்புருஷ ஈசானம்
அதுவே-
சத்யோஜாதம் வாமம் அகோரம் தத்புருஷ ஈசானம்'

என்பதாக அமையலாம்.

இவற்றினைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா நிறைவெய்த பாததீர்த்தம் சமர்ப்பித்து, கும்பதீபம் கற்பூர தீபம் காட்டி, கட்டியம் சொல்லி இறைவனை சகல பரிவாரங்களுடன் யதாஸ்தானத்திற்கு எழுந்தருளச் செய்வதாக கொடியேற்ற உற்சவம் இடம்பெறும்.

இத்தகு பெரியதொரு திருவிழாவினைத் தொடர்ந்து, அன்று மாலை யாகாரம்பம் நடைபெறும். பின்னர் தோத்திருவிழா- தீர்த்தத் திருவிழா நடைபெற்று கொடியிறக்கம் செய்யப் பெறும் வரையான மஹோத்ஸவ காலத்தில், துவஜஸ்தம்பத்திற்கு விசேட பூஜை ஆராதனைகளும், நவதிக்பாலகர்களுக்கும் பலியும் காலை - மாலை வேளைகளில் இடம்பெறும். அத்துடன் இவ்விரு வேளையும் முறைப்படி யாகசாலையில் யாகபூஜை செய்யப்படவதுடன் யாகசாலைக்கு முன் சுவாமி எழுந்தருளும் போது லாஜ புஷ்பாஞ்சலி செய்யப்பட்டு விசேட ஹோமங்களும் தீபாராதனைகளும் செய்வது வழக்கம்.

நல்லூர்க் கொடியேற்றம் என்ற துவஜாரோஹணத்தின் பொருளுணர்ந்து காண்போம். நலம் பல பெறுவோம்.

**சிவஸ்ரீ. தி. மயூரகிரிக்குருக்கள்**
**-நீர்வை**

# நல்லூரான் கொடிபார்ப்போம் எல்லோரும் வாருங்கள் !



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் .... ஆஸ்திரேலியா**

நாம்வணங்கும் வேலவனார் நல்லூரில் இருக்கின்றார்
நாடிவரும் அடியவர்க்கு நல்லருளை ஈகின்றார்
ஆடியிலே கொடியேற்றம் அருளொழுகும் வேலவர்க்கு
அனைவருமே வாருங்கள் அகநிறைவாய் ஆகிவிடும்

ஞானியரும் யோகிகளும் நல்லறிஞர் பலபேரும்
நாவலரும் பாவலரும் நடந்தவிடம் நல்லூரே
காவலென வேலவனார் கோவில்கொண் டிருக்கின்றார்
கந்தனது கொடியேற்றம் கண்டிடுவோம் வாருங்கள்

புண்ணியர்கள் பலபேரின் கால்பட்ட மண்ணாக
நல்லூரான் உறையும்மண் நமக்குவர மாயிருக்கு
வல்வினைகள் போக்குதற்கு நல்லூரைக் காணுங்கள்
நல்லூரான் கொடிகாண எல்லோரும் வாருங்கள்

வேதமொடு நாதம் வேலவர்க்கு வழங்கிடுவார்
காதலுடன் பண்பாடி கைகூப்பி வணங்கிடுவார்
ஆதவனும் எழுந்தங்கே அழகொளியை அளித்திடுவான்
அத்தருணம் நல்லூரான் கொடியேற்றம் நடந்துவிடும்

பக்தியொடு அடியார்கள் பாடிடுவார் ஓர்பக்கம்
பசியுடனே வேலவனை எண்ணிடுவார் ஓர்பக்கம்
சித்தமெலாம் வேலவனை இருத்திடுவார் ஓர்பக்கம்
அத்தனைபேர் முன்னிலையில் கொடியேற்றம் நடந்துவிடும்

மண்ணகத்து நல்லூரின் கொடியேற்றம் காண்பதற்கு
விண்ணகத்தார் மண்ணகத்தைப் பார்த்தபடி நிற்பார்கள்
வேலவனின் கொடியேற்றம் கண்டுவிட்ட வேளையிலே
மலர்மாரி பொழிந்தவர்கள் வாழ்த்தியே மகிழ்ந்திடுவார்

சாதிபேதம் நல்லூரில் தவிடுபொடி யாகிவிடும்
பேதமின்றி அடியவராய் வேலவனை வணங்கிடுவார்
கொடியேற்ற வேளையிலே அனைவருமே தமைமறந்து
வேலவனின் திருமுகத்தை மெய்மறந்து பார்ப்பார்கள்

நல்லூரான் கொடிபார்த்தால் நன்மைபல நமக்குவரும்
நல்லூரான் அருள்கிடைக்கும் நாளெல்லாம் மலர்ந்திடுமே
நாம்சேர்த்த வினையனைத்தும் நமைவிட்டே அகன்றிடுமே
நல்லூரான் கொடிபார்ப்போம் எல்லோரும் வாருங்கள்

## தென்கொரிய வேலைவாய்ப்புக்காக இதுவரை 3,694 பேர் சென்றுள்ளனர்

இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 3,694 பேர் தென் கொரியாவிற்கு வேலைக்காக சென்றுள்ளதோடு, மேலும் 100 பேர் விரைவில் தென் கொரியாவிற்கு செல்ல தயாராகவுள்ளனர் என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

உற்பத்தித்துறையில் பணியாற்றுவதற்காக எட்டு பெண்கள் உட்பட 100 பேர் செவ்வாய்க்கிழமை தென் கொரியாவுக்குச் சென்றுள்ளனர்.

இது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் தென் கொரிய மனித வள அபிவிருத்தி சேவை நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற வேலை வாய்ப்புகளின் ஒரு பகுதியாகும் என பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள இளைஞர்கள் மத்தியில் தென் கொரியாவில் வேலை தேடும் போக்கு அதிகரித்துள்ளது. மேலும் அதிகமான இளம் பெண்களும் இந்த வேலை வாய்ப்புகளை அங்கு தொடர்கின்றனர்.

தற்போது, தென் கொரியாவில் புதிய வேலை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் பல தொழிலாளர்கள் இந்த வேலைகளுக்கு எதிர்காலத்தில் வெளியேற உள்ளனர். (05)

## மனித உரிமை ஆணைக்குழுவில் நல்லூர் வீதிதடை மீது முறையீடு



நல்லூர் கந்தசுவாமி ஆலய சூழலில் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடைகள் தொடர்பில் கலந்துடையாடுவதற்கு யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் மற்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் யாழ். மாநகர சபையால் பொதுமக்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பாதை தடை தொடர்பில் பலதரப்பினராலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட முறைப்பாடு தொடர்பில் ஆணைக்குழுவால் கவனம் செலுத்துப்பட்டுள்ளது.

எனவே, இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இன்று (வெள்ளிக்கிழமை) மு.ப. 11.30 மணிக்கு இல 42, கோவில் வீதியில் அமைந்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் மற்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (05)

# கசிப்பு உற்பத்தி நிலையம் ஒட்டுசுட்டானில் சிக்கியது



ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மன்னாகண்டல் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்ட ஒட்டுசுட்டான் பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரையும் கசிப்பு உற்பத்தி செய்யும் கோடாவுடன் மூன்று பரல்களையும் மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கையில் –

ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மன்னாகண்டல் அறுமனாறு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக ஒட்டுசுட்டான் சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ரி.சுபேசன் தலைமையில் பொலிஸ் குழுவினர் சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

இதன்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 475 லீற்றர் கோடாவுடன் மூன்று பரல்கள் கோடாவினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் புதுக்குடியிருப்பு சிவநகர், மந்துவில் ஆகிய பகுதிகளை சேர்ந்த 37, 55 வயதுடைய இருவராவர்.

இந்நிலையில், மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

## ஆயுர்வேத வைத்திய சபைக்கு 712 விண்ணப்பங்கள்; வைத்தியர்களுக்கு பரீட்சை நடவடிக்கைகள் ஏற்பாடு!

ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்வதற்கு ஏற்கெனவே 712 பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர் எனவும், அவர்களுக்கான தேர்வை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் ,வ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

ஆயுர்வேத வைத்திய சபைக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைத்த பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களில் 45 வயதுக்குட்பட்டோருக்கு எழுத்துமூல பரீட்சையும், 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாய்மொழி மூலப் பரீட்சையும் நடத்தப்படும்.

கடந்த ,ரண்டு வருடங்களில் 552 ஆயுர்வேத வைத்தியர்கள் ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், பாரம்பரிய வைத்தியர்களின் பெயர்கள் பாரம்பரிய வைத்திய சபையில் பதிவு செய்யும் முறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தற்போது பொய்யான செய்திகள் பரவி வருகின்றன என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர், அடுத்த சில வாரங்களில் பாரம்பரிய வைத்தியர்களுக்கான சோதனை நடவடிக்கை ஆரம்பமாகும் என்றும் கூறியுள்ளார். (05)



## மட்டக்களப்பில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் படு கொலை

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் மிச்நகர் - ஹிஸ்புல்லா நகர் பகுதியில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் புதன்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

ஹிஸ்புல்லா நகர் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய திருமணமாகாத நபர், அவரது வீட்டில் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது வீட்டுடன் சேர்த்து அமைக்கப் பட்டிருக்கும் பலசரக்கு நிலையம் ஒன்றை நடத்திவரும் வர்த்தகர் ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ள நிலையில், கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை பொலிசார் தேடி வருகின்றனர்.

கொலை நடந்த வீட்டில் இருந்த சிசிரிவி கமராவின் பிரதான சேமிப்பு தட்டு சந்தேக நபரால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த தடயவியல் பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், ஏறாவூர்சுற்றுலாநீதிமன்றநீதிபதி சடலத்தை நேரில் சென்று பார்வையிட்டதுடன் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

சடலம்பிரதேபரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## மாணவர் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் மாணவர் சந்தை

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரியின் ஆரம்பப் பிரிவு தரம்-03 மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதிரி சந்தை நிகழ்வு பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

அதிபர் எம்.ஐ.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

ஆசிரியர்களின்வழிகாட்டுதல்கள் மற்றும்பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் இம்மாணவர் சந்தை வெகு விமர்சையாக இடம்பெற்றது.

மாணவர்களின் கணித மற்றும் தமிழ்அறிவைமேம்படுத்துவதுடன்;, சமூக தொடர்பாடல் விருத்தி, வியாபார நடைமுறைகள், சுகாதார பழக்க வழக்கங்கள், நட்புறவுச் செயற்பாடுகள், அன்றாட வாழ்கைக்குத் தேவையான விடயங்களை முன்னுரிமை அடிப்படையில் அணுகுதல் போன்ற பல்வேறு விடயங்கள் இதன்மூலம் மாணவர்களுக்கு தெளிவுபடுத் தப்பட்டன.

இதன்போதுமாணவச்சிறுவர்கள் மகிழ்வுடன் தமது விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், பாடசாலையின் ஏனைய மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்துஇச்சந்தையில்பல்வேறு பொருள்களைக் கொள்வனவு செய்தனர். குறித்த மாதிரி சந்தை செயற்பாடானது மாணவர்களின் ஆளுமைவிருத்தியைமேம்படுத்தும் செயற்பாடாய் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



# இரு சி.டி. ஸ்கேன், இரு எம்.ஆர்.ஐ.ஸ்கேன்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் செயலிழப்பு

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இயங்கிவந்த இரு சிரி ஸ்கேன் இயந்திரங்களும், இரு எம்ஆர்ஜ ஸ்கேன் இ யந்திரங்களும் செயலிழந்துள்ளன என தேசிய கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

அத்தோடு இயந்திர செயலிழப்பு காரணமாக வைத்தியசாலைக்கு சிகிச்சைபெற வரும் நோயாளர்களும் வைத்தியசாலை சேவை ஊழியர்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளதாகவும் சானக்க தர்மவிக்ரம மேலும் குறிப்பிட்டார்.

தேசிய வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இயந்திர செயலிழப்பு தொடர்பில் வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் ,வ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் -

நாடளாவியரீதியில்பெருமளவானநோயாளர்கள் சிகிச்சைக்காக சமுகமளிக்கும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இயங்கிவந்த நான்கு ஸ்கேன் இயந்திரங்கள் செயலிழந்துள்ளன. அவற்றுள் இரு சிரிஸ்கேன் இயந்திரங்களும் இரு எம்ஆர்ஜ ஸ்கேன் இயந்திரங்களும் உள்ளடங்குகின்றன. இதனால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களும் வைத்தியசாலை ஊழியர்களும் ஸ்கேன் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாமல் பெரும் அசௌகரியத்திற்கு முகம் கொடுத்துள்ளனர்.

தற்போதுவைத்தியசாலையில்உள்ளஇருஎம்ஆர்ஜ ஸ்கேன்இயந்திரங்களைபயன்படுத்தி24மணிநேரமும் பரிசோதனைகள்மேற்கொள்ளப்படுகின்றன.எனினும் பரிசோதனைக்காக காத்திருக்கும் நோயாளர்களின் பட்டியல் நீண்டுள்ளது. குறித்த ,யந்திரங்களில் முதல் இயந்திரம் பழுதாகி 5 மாதங்கள் கடந்துள்ளதுடன் இரண்டாவது இயந்திரம் பழுதாகி மூன்று வாரங்கள் நிறைவடைந்துள்ள போதிலும் இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்கான எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. மேலும் சிரி ஸ்கேன் இயந்திரங்களில் முலாவது இயந்திரம் பழுதாகி 4 வாரங்கள் நிறைவடைந்துள்ளதுடன் இரண்டாவது ,யந்திரம் செயலிழந்து இரு நாள்கள் கடந்துள்ளன.

இதனால் பட்டியலிடப்பட்டுள்ள நோயாளிகளுக்கான பரிசோதனைகளையும் இடைநிறுத்த வேண்டியது. பரிசோதனைகளை நடத்துவதில் காலதாமதம் ஏற்படுவதால் உரிய சிகிச்சைகளை வழங்கமுடியாதுள்ளது. இதனால் உயிராபத்துக்கள் ஏற்படும் சாத்தியப்பாடுகளும் அதிகரித்துள்ளன. பழுதடைந்துள்ள இயந்திரங்களை காலதாமதமின்றி மீள் சீரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ,இது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் ,ச்செயற்பாட்டை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. - என்றார்.


(05)

யாழ்ப்பாண வர்த்தகத் தொழிற்துறை மன்றம் ஒழுங்கமைத்து நடாத்தும்

CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGTH

JAFFNA INTERNATIONAL BOOK FESTIVEL
யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா
JIBF 2024

யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா - 2024
Jaffna International Book Festival - 2024



ஆகஸ்ட் – 9 ,10 மற்றும் 11 ம் திகதிகளில்
9th ,10th & 11th August - 2024

யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையம்
Jaffna Cultural Centre – Exhibition gallery space

CCIY . 63- NALLUR CROSS ROAD. NALLUR. JAFFNA | info@cciy.lk | 070 366 3603

ஊடக பங்காளர்கள் காலைக்கதிர்

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாணத்தில் விபத்துகளை குறைத்தல் தொடர்பான செயலமர்வு

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் வீதி விபத்துகளை குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சினது காயம் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகின் கிழக்கு மாகாணத்திற்கான மீளாய்வுக் கூட்டம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண வைத்தியசாலைகள் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை, அம்பாறை பிராந்தியங்களின் சுகாதார பணிப்பாளர் பணிமனை அதிகாரிகள் கலந்து பங்குபற்றிய இவ் மீளாய்வுக்கூட்டமானது புதன்கிழமையன்று மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வரவேற்புரை நிகழ்த்திய மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி இரா. முரளீஸ்வரன்

வீதி விபத்துக்கள் மற்றும் காயங்கள் பற்றிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வுகளை விரிவுபடுத்தல் போன்ற செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதன் மூலம் வீதி விபத்துக்களை குறைப்பதுடன், சுகாதார சேவைகளுக்கான நிதி மற்றும் வேலைப்பழுவினை கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

இதை தொற்றா நோய்களுக்கான மட்டக்களப்பு பிராந்திய வைத்திய அதிகாரி வைத்தியர் இ.உதயகுமார் ஒருங்கிணைத்து நடத்தினார்.

காயத்தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் வைத்திய கலாநிதி சமிதாசிறிதுங்க கிழக்கு மாகாண வைத்தியசாலைகள் காயம் தடுப்பு சிகிச்சைகளில் பங்களிக்கும் விதம் மற்றும் தரவு நுழைவு அறிக்கைள் போன்றவற்றை விவரித்திருந்தார்.

தொடரந்து, மாகாண வைத்திய சாலைகள் தங்களது தங்களின் தரவுகள் அடிப்படையிலான செயற்பாடுகளையும் முன்வைத்து விவரிப்புக்களை மேற்கொடிருந்தனர். சுகாதாரத்துறையுடன் ஏனைய பொலீஸ் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மாநகரசபை பாடசாலைகள் ஏனைய அரசு சாரா நிறுவனங்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல் வீதி விபத்து அதிகம் நடைபெறும் இடங்களை கண்காணித்து கூடிய கவனம் செலுத்தல் என்பன பற்றியும் திட்டமிடப்பட்டது.

மாகாண மற்றும் அமைச்சு அதிகாரிகளிடையே காயம்தடுப்பு நோக்கில் காத்திரமான உரையாடல்கள் கருத்துப்பரிமாற்றங்களுடன் நடைபெற்றதும் பல







ஆலோசனைகள் முன்வக்கப்பட்டதும் இவ் மீளாய்வுக் கூட்டத்தின் வெற்றியாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் கல்முனை வலையக்கல்வி பணிமனையின் இந்துசமய பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் ம.லக்குணம், மற்றும் திருமதி புண்ணியமலர் அம்மையார், கல்முனை வடக்கு பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி நா. ஸ்ரீபிரியா, சைவப் புலவர் வளவாளர் ஜோ.கஜேந்திரா, வளவாளர் நா.சனாதனன், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர் .

பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப்படங்களை சமயப்பற்றாளர் மகேந்திரன் சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்திற்கு வழங்கி வைத்தார் . இதனை பாடசாலைகளுக்கு மன்றஉறுப்பினர்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கி வருகின்றனர். ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டார்.(05)

# பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமலுக்கு வடக்கு கிழக்கு இளைஞர்கள் ஆதரவு கிட்டும்

## உறுதிபடக் கூறுகின்றார் கீத்நாத் காசிலிங்கம்

பொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் நாமல் ராஜபக்ஷவுக்கு வடக்கு கிழக்கு இளைஞர்களின் ஆதரவு கிடைக்கும் என பொதுஜன பெரமுனவின் மத்திய குழுவில் வட மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கீத்நாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ வடக்கு கிழக்கு மாவட்டங்களில் மக்களுடன் கலந்து ரையாடல்களில் ஈடுபட்டு அவர்களின் பிரச்சினைகளை புரிந்துகொண்டுள்ளவர் என்பதால் வடக்கு, கிழக்கு இளை ஞர்களின் ஆதரவை பெறும் முதலாவது ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ விளங்குவார் எனவும் தெரிவித்துள்ளார்.

2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு, கிழக்குக்கு விஜயம் மேற்கொண்ட முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ எனவும் தெரிவித்துள்ள அவர், மக்களின் துயரங்களை அறிந்துகொள்வதற்காகவே நாமல் ராஜபக்ஷ அங்கு சென்றார். அந்த பகுதியின் அரசியல் பொருளாதார சமூக நிலை குறித்து நாமல் ராஜபக்ஷ ஆழ்ந்த அறிவை பெற்றுக்கொண்டுள்ளார் என கீத் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களுக்கு கிடைத்த வாக்குகளை விட அதிக வாக்குகள் நாமல் ராஜபக்ஷவுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். குறிப்பாக மாற்றத்தை எதிர்பார்க்கும் இளம்தலைமுறையினர் நாமல் ராஜபக்ஷவை ஆதரிப்பார்கள் எனவும் கீத்நாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

(05)

# 22 இந்திய மீனவர்களுக்கும் 22ஆம் திகதி வரை மறியல்

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி கற்பிட்டி வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிவான் மாலை உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு படகுகளில் தமிழகம் - தூத்துக்குடியில் இருந்து வந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இந்திய மீனவர்கள் 22 பேரும் எல்லை தாண்டி புத்தளம் - கற்பிட்டி வடக்கு கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது திங்கட்கிழமை இரவு கடற்படையிரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், குறித்த இந்திய மீனவர்கள் பயணித்த இரண்டு விசைப்படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 22 மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அவர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.


சட்டவிரோதமாக இலங்கை எல்லைக்குள் நுழைந்தமை தொடர்பில் இந்த 22 இந்திய மீனவர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டது.


கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் சார்பில் இந்திய உயர்ஸ்தானிகரின் வேண்டுகோளின் பேரில் சட்டத்தரணிகளான பாரிஸ் மரிக்கார் மற்றும் அபுஹர் மொஹமட் அஸ்பார் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இரு பிரிவுகளாக எடுத்துக் கொள்ளப் பட்ட வழக்கில் முதலில் 12 பேரும், பின்னர் 10 பேரும் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது சந்தேக நபர்களான இந்திய மீனவர்கள் 22 பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.(05)

# பாண்டிருப்பில் சுவாமி விபுலாநந்தரின் துறவற தின நூற்றாண்டு விழா நிகழ்வு












(வி.ரி. சகாதேவராஜா)

பாண்டிருப்பில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைகளமும், சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் இவ் விழாவை நடத்தியது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழா பாடசாலையின் அதிபர் கே. அருண்குமார் தலைமையில் இடம் பெற்றது. (05)

# பேரா. சிவலிங்கராஜாவின் நூல் யாழ்ப்பாணத்தில் வெளியீடு



யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் அனுசரணையுடன் செவ்வாய்க்கிழமை யாழ். கலாசார நிலையத்தில் நடைபெற்ற பேராசிரியர் சி. சிவலிங்கராஜா எழுதிய இந்திய இலங்கை கல்விசமய பண்பாட்டு பாலம் ஆறுமுகநாவலர் 200 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூல்களை யாழ். இந்திய துணைத்தூதுவர் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், வட மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# குவேனி பழங்குடி அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச பழங்குடியினர் தின நிகழ்வுகள்



திருகோணமலை மாவட்ட குவேனி பழங்குடி அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச பழங்குடியினர் தினத்தை முன்னிட்டு மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நீணாக்கேணி - மலைமுந்தல் கிராமத்தில் உள்ள முருகன் ஆலயத்தில் கரையோர பழங்குடிகளுக்கான தினம் புதன்கிழமை அனுஷ்டிக் கப்பட்டது.

குறித்த நிகழ்வில், பழங்குடி மக்கள் தங்களின் வாழ்க்கை முறையோடு ஒட்டியதாக மேள தாளங்களோடு பாடல் பாடி அதிதிகள் அழைத்து வரப்பட்டனர்.

இதன்போது பழங்குடி பூஜை, பாடலும் இடம்பெற்றிருந்து. அத்தோடு பழங்குடியினரின் முக்கிய உணவான மரவள்ளிக் கிழங்கு நிகழ்வில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அத்தோடு பழங்குடியின மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தமது கோரிக்கை உள்ளிட்டவைகளை திருகோணமலை,மட்டக்களப்பு மாவட்ட பழங்குடியின தலைவர்கள் இணைந்து வருகை தந்த அதிதிகளிடம் கையளித்திருந்தனர்.

குறித்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட பழங்குடியின தலைவர் நல்லதம்பி வேலாயுதம், திருகோணமலை மாவட்ட பழங்குடியின தலைவர் நடராசா கணகரட்ணம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய இணைப்பாளர் ஏ.எல்.எம்.இஸ்ஸடீன், மூதூர் உதவி பிரதேச செயலாளர் றொசானா ரஸீம் ,கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் பணிப்பாளர் மதன் ,மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மூதூர் பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் பழங்குடியின பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)

# மின்சாரம் தாக்கியதால் இராணுவ சிப்பாய் சாவு

## முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு - கேப்பாபிலவு பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் ஒன்றில் கடமையாற்றும் இராணுவ சிப்பாய் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

குறித்தசம்பவம்புதன்கிழமைகாலை இடம்பெற்றுள்ளதாகதெரியவருகின்றது.

கேப்பாபிலவு பகுதியில் உள்ள ஆறாவது காலாட்படையில் கடமையாற்றும், கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய லான்ஸ் கோப்ரல் நிலையுடைய சிப்பாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது உயிரிழப்பு தொடர்பில் இராணுவபொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், சடலம் முல்லைத்தீவு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (05)

# மருத்துவ(திருத்த)சட்டமூலங்கள் திருத்தங்களுடன் நிறைவேற்றம்

மருத்துவ (திருத்தச்) சட்டமூலங்கள் இரண்டு நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

நாடாளுமன்றம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து 10.30 மணி முதல் ,ச்சட்டமூலங்கள் குறித்த ,ரண்டாவது மதிப்பீடு விவாதம் நடைபெற்றது.

இதன்போது குறித்த சட்ட மூலங்களின் முக்கியத்துவம் தொடர்பில் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் கருத்துக்களை முன்வைத்தனர். விவாதம் முடிவடைந்ததும் குழு நிலையில் குறித்த சட்டமூலங்களுக்கான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இரு சட்டமூலங்களும் விவாதம் இன்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கான இரு மருத்துவ (திருத்தச்) சட்டமூலங்களும் சுகாதார அமைச்சரால் கடந்த ஜூலை 02 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

# வெளிநாடு அனுப்புவதாகக் கூறி பண மோசடி; மேசடியாளர் யாழ். அழைக்கப்பட்டு தாக்குதல்

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி பல லட்சம் ரூபா பணத்தினை மோசடி செய்தவர் மீது தாக்குதல் நடத்தியவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் பிரான்ஸ் நாட்டிற்கு செல்வதற்காக 25 லட்சம் ரூபா பணத்தை நீர்கொழும்பு பகுதியில் வசிக்கும் நபர் ஒருவருக்கு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் அவர் சிங்கப்பூர் வரையில் அழைத்துச் செல்லப்பட்டு ஏமாற்றப்பட்டதுடன், மீண்டும் அவர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

இதனையடுத்து பணத்தைக் கொடுத்து ஏமாந்த நபரும் அவரது சகோதரனும், நீர்கொழும்பை சேர்ந்த நபரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து தாக்குதல் நடத்தி அவரிடமிருந்து ஐந்து லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

தாக்குதலுக்கு உள்ளான நபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், தாக்குதலை நடாத்திய இருவரும் கைது செய்யப்பட்டு புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில் அவர்கள் இருவரையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.(05)

# தீயை அணைக்க ஓடிச்சென்ற தந்தை மின்சாரம் தாக்கி சாவு

## சந்தேகநபர்கள் கைது

வீடொன்றில் தீ பரவியபோது, தீயை அணைக்க முற்பட்ட அவ்வீட்டின் உரிமையாளர் தீயில் விழுந்து, மின்சார கேபிளில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் தங்கொட்டுவ, புஜ்ஜம்பொல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான 26 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் உயிரிழந்த வீட்டின் உரிமையாளரது மனைவி பொலிஸாரிடம்அளித்தமுறைப்பாட்டின் அடிப்படையில், சந்தேக நபர்களை கொஸ்வத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.(05)

# செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் நூற்றாண்டு விழாச் சிறப்பு நிகழ்வுகள்



யாழ்ப்பாணம்வடமராட்சிகிழக்குசெம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சைக்கிள் பேரணி ஒன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் இடம் பெற்றது.

பாடசாலைஅதிபர்சு.கணேஸ்வரன்தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் வடக்கு மாகாண கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும், கூட்டுறவு ஆணையாளருமாகிய ந. திருலிங்கநாதன் கலந்துகொண்டிருந்தமையுடன், சிறப்புவிருந்தினராக பழையமாணவனும்பாடசாலைபரிசளிப்புவிழாவின் அனுசரணையாளருமான க. இராஜரட்ணம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

காலை 8 மணி அளவில் மாணவர்களின் நடை பவனியும் அதனை தொடர்ந்து சைக்கிள் பவனியும், பழைய மாணவர்களின் வாகன பேரணிகளும் இடம்பெற்றன.

பாடசாலை முன்றிலில் இருந்து ஆரம்பமான குறித்த பவனி மாமுனைச் சந்தியை அடைந்து அங்கிருந்து மாமுனை கடற்கரைக்கு சென்று, கடற்கரையில் இருந்து தாளையடி கடற்கரை சென்று அங்கிருந்து மருதங்கேணி சந்திக்கு சென்று அங்கிருந்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

மேற்படி நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அயல் பாடசாலை அதிபர்கள் கோட்டக் கல்வி பணிப்பாளர், உட்பட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அலபதெனியவில் வீதியை விட்டு விலகி வீட்டின் கூரையின்: மீது பாய்ந்த கார்

## பெண் காயம்



மொரவக்க - அலபதெனிய பிரதேசத்தில் காரொன்று வீதியை விட்டு விலகி, வீடொன்றின் கூரை மீது விழுந்து விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த பெண் காயமடைந்துள்ளார் என மொரவக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெலுவயிலிருந்து மொரவக்க நோக்கி சென்றுகொண்டிருந்த கார், வீதியை விட்டு விலகி சுமார் 25 அடி பாய்ந்து, வீடொன்றின் கூரை மீது விழுந்துள்ளது.

கார் விழுந்ததில் அவ்வீட்டின் கூரையும் சேதமடைந்துள்ளது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயா'ரகி 09.08.2024இல் வெளியிடப்பெற்றது